Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 210 | வெள்ளிக்கிழமை 24 ஜூன் 2022 | ஆனி 10 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ. 50



முச்சந்தி முரளி

"முப்பது வருசப் போரில் அழியாமல், கடைசியா பெற்றோலுக்காக அடிபட்டுத்தான் இலங்கை அழியப்போகுது போல..."

## பெற்றோல் கப்பல் வருவது தாமதம்

கொழும்பு, ஜூன் 24
நாட்டுக்கு நேற்று வரவிருந்த 92 ஒக்ரேன் பெற்றோல் அடங்கிய கப்பல், ஒரு நாள் தாமதித்தே - இன்றே - நாட்டை வந்தடையும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.
இதனால் இன்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றோல் விநியோகிக்கப்படும் 12 ➤

## எரிபொருள் விலை நள்ளிரவு அதிகரிப்பு?

### பெற்றோல் ரூ.74, டீசல் ரூ.56

கொழும்பு, ஜூன் 24
எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய இன்று நள்ளிரவு முதல் எரிபொருள் விலை அதிகரிக்கப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.
ஒக்ரேன் 92 12 ➤

கட்டுப்பாட்டு விலையை மீறிய

## யாழ். வர்த்தகருக்கு ரூ. 1 இலட்சம் தண்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களின்போது கட்டுப்பாட்டு விலையை மீறியதாகக் குற்றஞ்சுமத்தப்பட்ட வர்த்தகர்களில் ஒருவருக்கு யாழ். மேல் நீதிமன்றால் 13 ➤

## எரிவாயுக் கப்பல் அடுத்த மாதம்

கொழும்பு, ஜூன் 24
எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 12ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் 7 ஆயிரம் மெற்றிக்தொன் சமையல் எரிவாயுவைத் தாங்கிய இரண்டு கப்பல்கள் இலங்கை வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. லிட்ரோ 12 ➤

நெருங்கிய நட்புநாடு என்ற அடிப்படையில்

# அதிகபட்ச உதவிகளை இந்தியா வழங்கும்!

சிறிலங்கா ஜனாதிபதியிடம் நேரில் உறுதியளித்தார் இந்திய வெளிவிவகாரச் செயலர் வினய் குவாத்ரா

**கொழும்பு, ஜூன் 24**



**சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள இக்கட்டான சூழ்நிலையில் இருந்து மீள்வதற்கு இந்திய அரசாங்கம் நெருங்கிய நண்பராக முழு ஒத்துழைப்பையும் வழங்கும் என இந்திய வெளிவிவகாரச் செயலர் வினய் குவாத்ரா தெரிவித்துள்ளார்.** 15 ➤

எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

## இராணுவம் - பொலிஸ் கடும் மோதல்!

கொழும்பு, ஜூன் 24
வரக்காபொல, தும்மலதெனிய பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு 13 ➤

## ஆசிரியர்களுக்கு எரிபொருள் வழங்குவதற்கு விசேட ஏற்பாடு

கிளிநொச்சி, ஜூன் 24
கிளிநொச்சியில் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குளிபொருள்வழங்க விசேட ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கிளி. மாவட்டச் செயலர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். நாளைமறுதினம்ஞாயிற்றுக்கிழமை குறிப்பிட்சில மணித்தி 12 ➤

டீசல் விநியோக குளறுபடி

## தனியார் பேருந்துச் சேவையினர் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
வடமராட்சி தனியார் பேருந்து சேவைச் சங்கம் இன்று கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.
பருத்தித்துறை இ.போ.ச. டிப்போவில் இடம்பெறும் டீசல் விநியோகத்தில் முறைகேடுகள் அவமதிப்புகள் இடம்பெறுகின்றது எனத் தெரிவித்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. (அ-ஒ-இ)

எரிபொருள் கிடைக்க ஒத்துழைக்காவிடின்

## யாழ். போதனா முடங்கும் நிலை!

தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 24
எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்குபொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ். போதனா 15 ➤

மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கற்ற நடவடிக்கை

## எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நேற்றும் பரவலாகக் குழப்பங்கள்



யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாண மாவட்டச் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோகம் பிரதேச 12 ➤

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் தாக்குதல் இளைஞன் பரிதாபமாக உயிரிழப்பு

யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜூன் 24
யாழ்ப்பாணம் மகாத்மா காந்தி (மணிக்கூட்டு) வீதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்ட இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டிருந்த சிலரே குறித்த இளைஞர் மீது தாக்குதல் நடத்தினரென உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். 15 ➤

## வத்தளைவாசி முல்லையில் சடலமாக மீட்பு

முல்லைத்தீவு, ஜூன் 24
மாந்தை கிழக்கு - பாலிநகர் பகுதியில் அமைந்துள்ள மதுபான நிலைய உரிமையாளர் நேற்றுக் காலை மதுபான நிலைய அருகிலுள்ள தங்குமிடத்திலிருந்து சடல 15 ➤

## வீட்டில் பிரவசத்துக்கு தயாராக இருங்கள்!!!

குடும்ப சுகாதாரசேவை உத்தியோகத்தர் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
கர்ப்பிணித் தாய்மார்களை வீட்டிலேயே பிரசவத்துக்குத் தயாராக இருக்குமாறு குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் சங்கம் தனது உறுப்பினர் 12 ➤

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தை எதிர்த்து தொடர் போராட்டங்கள்!



## ஜே.வி.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 24**

**அரசாங்கத்தை பதவி விலகச் செய்வதற்காக தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. மக்களின் ஆர்ப்பாட்டங்களை புத்துயிர் பெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மக்கள் விடுதலை முன்னணி அறிவித்துள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர்கள் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்த அமைச்சரவைக்கு தொடர்ந்தும் நாட்டை நிர்வகிக்கும் உரிமை கிடையாது. மக்களைப் பற்றி எவ்வித கவலையும் அற்ற அரசாங்கமே தற்போது நாட்டை ஆட்சிசெய்து கொண்டிருக்கின்றது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாவலராக செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். கோத்தாபய ராஜபக்சவும், ரணில் விக்கிரமசிங்கவும் மீண்டும் அவர்களின் அரசியல் விளையாட்டுக்களை ஆரம்பித்துள்ளனர்.

அதனால் மக்களின் ஆர்ப்பாட்டங்களை மீண்டும் புத்துயிர் பெறச் செய்து, அவர்களுடன் இணைந்து போராடுவதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.

எதிர்வரும் 26ஆம் திகதி அநுராதபுரத்திலும், 27ஆம் திகதி குருநாகலிலும், 28ஆம் திகதி மாத்தறையிலும், 29ஆம் திகதி களுத்துறையிலும் ஜூலை முதலாம் திகதி அம்பலாந்தோட்டையிலும் தொடர் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதேபோன்று நாட்டின் ஏனைய நகரங்களிலும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் -என்றார். (எ-இ)

# இளவயது எய்ட்ஸ் தொற்றாளர் இலங்கையில் திடீர் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 24

கடந்த ஆண்டில் 439 எய்ட்ஸ் நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய எய்ட்ஸ் தடுப்பு திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் 20 எச்.ஐ.வி. தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் 20 முதல் 49 வயது வரையிலானவர்கள். கடந்த காலங்களை விடவும் இளம் வயதினர் எய்ட்ஸ் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ளது.

இது ஓர் ஆபத்தான நிலை. கூடுதல் எண்ணிக்கையிலான தொற்றாளிகள் மேல் மாகாணத்தில் பதிவாகினர். அறிமுகம் இல்லாதவர்களுடன் பாலுறவு கொள்ளும் போது பாதுகாப்பான வழிமுறைகளை பின்பற்ற வேண்டியது அவசியமானது -என்றார். (எ-இ)



# பாம்புக் கடிக்கு மருந்தின்றி 20 பேர் இதுவரை உயிரிழப்பு

பாம்பு விசத்தை முறிப்பதற்கான தடுப்பு மருந்துகள் இல்லாமையால் இதுவரையில் 20 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என்று அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:-

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும். சில மருந்துகளுக்கு தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3 வாரங்களுக்குள் மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையும்.

மருத்துவமனைக் களஞ்சியங்களில் இருந்து 20 வீத மருந்துகளே தற்போது வழங்கப்படுகின்றன. அவையும் எதிர்வரும் காலங்களில் நிறைவடையவுள்ளன. தற்போது மருத்துவமனைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப்படுகின்றன. வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்றது -என்றார். (எ-இ)

# பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வேண்டும் ரணில்

## வலியுறுத்துகின்றார் மைத்திரி

கொழும்பு, ஜூன் 24

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்ததன் மூலம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அரசமைப்பை மீறியுள்ளார் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குற்றம் சுமத்தியுள்ளார்

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பெரும்பான்மை பலமுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை பிரதமராக நியமிக்க வேண்டும் என்று அரசமைப்பில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பதவி விலகலால் வெற்றிடமான பதவியை ஏற்க ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருக்கு அழைப்பு விடுத்ததன் மூலம் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அரசமைப்பை மீறியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்தது சட்டவிரோதமானது. ஜனாதிபதி எடுத்த அனைத்து முடிவுகளையும் நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தலாம். இதனாலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்போதை நிர்வாகத்தை பதவிவிலக வேண்டும் என்றும், தேர்தல் நடக்கும் வரையில் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்துகின்றது.

ஜனாதிபதியின் முடிவை நிரூபிக்க, தனக்கு பெரும்பான்மை இருப்பதை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிரூபிக்க வேண்டும். நாம் அண்மையில் பேச்சு நடத்திய பல வெளிநாட்டுத் தூதுவர்கள், முறையான அரசாங்கம் அமைந்தால் மட்டுமே இலங்கைக்கு உதவி வழங்க முடியும் என்று தெரிவித்துள்ளனர். அவர்கள் இடைக்கால அரசாங்கத்தையோ அல்லது ஒன்றிணைந்த ஆட்சிகளையோ கையாள விரும்பவில்லை. ஆக்கபூர்வமான மாற்றங்கள் ஏற்படும் வரை அரசியல் நிலைமைகளை தொடர்ந்து அவதானிப்போம் என்று அவர்கள் தெரிவித்தனர்.

அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டனர். ஆகையால் இந்தக் குழப்பத்தில் இருந்து விடுபட ஒரே வழி பொதுத் தேர்தலை நடத்துவதுதான் -என்றார். (எ-இ)




# ஐ.நா. அலுவலகம் முன்பாக கொழும்பில் ஆர்ப்பாட்டம்!


கொழும்பு, ஜூன் 24

கொழும்பு பௌத்தலோகமாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

முறையற்ற கைதுகளை தவிர்க்க வேண்டும், எரிபொருள் வரிசைகளில் நீண்ட நேரம் காத்திருக்கும் மக்களுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முறுகலில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஐ.நா. அலுவலகத்தில் தங்கள் கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் கையளித்தனர். (எ-இ)

# விமான நிலையங்கள் ஊடாக வருவோர் எண்ணிக்கை சரிவு



கொழும்பு, ஜூன் 24

பயணிகளின் வருகை மற்றும் புறப்பாடுகளில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளது என்று விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் பணிப்பாளர் ஷெஹான் சுமனசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:-

கொரோனா காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளது.

கொரோனா தொற்றுநோய் காரணமாக நாட்டுக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவுக்கே குறைந்திருந்தது. ஆனால் தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டுக்கு வருபவர்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது -என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டும் ஒரு மோதலுக்கு வித்திடுகிறார் வீரசேகர!

## நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கண்டனம்

**கொழும்பு, ஜூன் 24**

**சரத் வீரசேகரவின் பேச்சு மிகமோசமான வகையில் ஆக்ரோஷமாக உள்ளது. இப்படியான பேச்சுக்கள்தான் கடந்த காலங்களில் இன முறுகலை உருவாக்கி நாட்டில் போர் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தன. நாட்டில் மீண்டும் இனமோதலைத் தூண்டி நாட்டை அழிவுக்குள் தள்ள இத்தகைய பேச்சுக்கள் காரணமாக அமைந்துவிடும் என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன்.**

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அநுராதபுரத்தில் திராவிட முறையில் கட்டப்பட்ட 20க்கும் மேற்பட்ட சைவ ஆலயங்களின் இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. பொலநறுவையில் 12 சைவக் கோவில்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந்த ஆலயங்கள் தேசிய மரபுரிமை சின்னங்களாக கருதப்பட்டனவே தவிர அவை மீளுருவாக்கம் செய்யப்படவில்லை. அப்படி இருக்கும் போது குருந்தூர்மலையில் மட்டும் புத்தர் சிலையை நிறுவி பௌத்தத்தை மீளுருவாக்கம் செய்ய முற்படுவது சிங்கள குடியேற்றத்துக்கான கால்கோளே அன்றி வேறென்ன?

முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர, தமிழ் மக்களை எச்சரிக்கும் வகையில் பௌத்த சிங்கள மக்களின் பொறுமைக்கும் எல்லையுண்டு.

அதனை அவர்கள் தாண்டி விடுவார்கள் என்ற அர்த்தத்தில் பேசியிருந்தார். அவர் பேசிய விடயம் குருந்தூர்மலையில் நீதிமன்ற உத்தரவை மீறி புத்தர் சிலை ஒன்றை நிறுவ முயற்சித்தபோது அங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா கஜேந்திரன், வினோநோகராதலிங்கம், முன்னாள் வடமாகாண அமைச்சர் சிவநேசன் ஆகியோரின் தலைமையில் அதனை தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை எச்சரிக்கும் வகையிலேயே அமைந்தது. இது இனங்களிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்து நாட்டை அழிவுகளுக்கு இட்டுச்செல்லுமே தவிர, நாட்டை முன்னேற்றவோ ஐக்கியத்தை கட்டியெழுப்பவோ மாட்டாது. இதனை நாம் அனைவரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும் -என்றார். (ம-22)



## சிறிலங்கா வரவுள்ள அமெரிக்கக் குழு

கொழும்பு, ஜூன் 24

அமெரிக்க திறைசேரி அதிகாரிகள் குழுவொன்று சிறிலங்கா வரவுள்ளது. இந்தக் குழுவினர் எதிர்வரும் திங்கட்கிழமை சிறிலங்காவை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, நாட்டை வந்தடைந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவினர் எதிர்வரும் தினங்களில் முக்கியமான பேச்சுக்களில் ஈடுபடவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படவுள்ள கடனுதவி தொடர்பில் இதன்போது முக்கியமாக பேசப்படவுள்ளது. (எ-இ)

## முழுநாடும் இன்று அகதிகள் முகாம்!

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு




கொழும்பு, ஜூன் 24

இலங்கையினால் வெளியிடப்பட்ட இறையாண்மை பிணைமுறிக்கு முதலீடு செய்த அமெரிக்க வங்கியொன்று, தனது பணத்தையும் வட்டியையும் தரக்கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளமை மிகவும் துரதிர்ஷ்டவசமான நிலை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று முழுநாடும் அகதிகள் முகாமாக மாறியுள்ளது. மக்களின் இன்னல்களை அறியாத தர்மசங்கடத்துக்குள்ளான அரசாங்கம் நாடாளுமன்றத்தை முட்டாள்தனமான ஓர் இடமாக மாற்றியுள்ளது -என்றார். (ம)

# மருந்துத் தட்டுப்பாடு ஏற்படுவதற்கு டொலர் கிடைக்காமையே காரணம்

## முன்னாள் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24

நாட்டில் மருந்து தட்டுப்பாட்டுக்கு காரணம் கடந்த காலங்களில் தேவையான அளவு டொலர் வழங்கப்படாமையே என முன்னாள் சுகாதார இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மருந்து தட்டுப்பாடு உள்ளிட்ட விவகாரங்கள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் இதற்கு டொலர் வழங்குவதாக பல சந்தர்ப்பங்களில் உறுதியளித்த போதும் டொலரை வழங்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)

## புதினம் தெரியுமோ?

தமிழ் எம்.பி. மாருக்கு இப்ப பார்லிமெண்டுக்கு போறதெண்டாலே பெரும்பாடாப் போச்சுது. அவைக்கு கொழும்புக்கு போய்வர பெற்றோல் கிடைக்கிறது ஏலாமல் கிடக்குதாம். முந்தி சில செற்றுகளில, எங்கட ஏரியா எம்.பி எண்டு கொஞ்சம் பெற்றோல் குடுத்தவை. ஆனால் இப்ப அப்பிடி எம்.பிமார் இடையால புகுந்தால், சனம் அடிச்சே கொண்டிடும். அந்தளவுக்கு வரிசையில நிக்கிறவை உக்கிரமா இருக்கினம். முந்தநாள் பெற்றொல் செற் ஒண்டில நடந்த சண்டையில, மூக்கில அடிவாங்கின பெடியன் ஒருத்தனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோற அளவுக்கு எல்லாருக்கும் வன்மம் தலைக்குள்ள ஏறிட்டுது. இப்பிடியான நேரத்தில "பார்லிமெண்டுக்கு போகோணும். அதுக்கு பெற்றோல் அடிக்க முன்னுரிமை தர வேணும்" எண்டு எம்.பிமார் செற்றுகளில போய் நிண்டால், அதோட அவையின்ர கதை கந்தலாயிடும்.

ஆனால், பெற்றோல் அடிக்காட்டி, பார்லிமெண்டுக்கு போய்வர ஏலாது. வடக்கு, கிழக்கில உள்ள எம்.பிமார் பார்லிமெண்டுக்கு போய்வர எப்பிடியும் அம்பது லீற்றர் பெற்றோலாவது வேணும். அந்தளவு பெற்றோலை அடிக்கிறது இப்பத்தை நிலைமையில சாத்தியமில்லை. கொஞ்சநாளைக்கு முதல் சில எம்.பிமார் தங்கட வாகன ராங்கில அவ்வளவு பெற்றோல் கொள்ளாது எண்டதால, இன்னொரு கானில மேலதிகமா பெற்றோலோ, டீசலோ கொண்டு போறவை. இப்ப கானில பெற்றோல் அடிக்க பெர்மிசன் இல்லை. அதால கானிலையும் கொண்டு போக ஏலாது. அப்பிடிக் கொண்டுபோகாமல், அளவா பெற்றோல் அடிச்சுக் கொண்டு போனால், திரும்பிவர பெற்றோல் காணாது. இடைவழியில நிண்டு 'ததிங்கிணத்தோம்' எண்டு நாட்டியமாட வேண்டியதுதான்.

இந்த நிலமையிலதான் ரெலோ எம்.பி செல்வத்தார் 'சூமில பார்லிமெண்ட மீட்டிங்கை வைச்சால் பெற்றோல் செலவுமில்லை, நாங்களும் அதில பங்கேற்கலாம்' எண்டு சொல்லியிருக்கிறார். ஆனால் இவை சொல்லிறதை சபாநாயகரோ, அரசாங்கமோ முதலில காது குடுத்துக் கேக்க வேணுமே. அதைவிட போனவருசம் போக்குவரத்துக்கு எந்தளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிச்சோ, அதேயளவுதான் இப்பவரைக்கும் எம்.பிமாருக்கு குடுபடுகுது. ஆனால் அந்தக் காசில, மக்களைச் சந்திக்கப் போற வாகனச் செலவைக்கூட சமாளிக்க ஏலாமல் இருக்கெண்டும், கைக்காசைப் போட்டுத்தான் சனங்களைச் சந்திக்கவே போய்வர வேண்டியிருக்கெண்டும் எம்.பிமார் சொல்லுகினம்.

'உண்மையில இப்ப எங்களுக்குத்தான் கடும் பொருளாதார நெருக்கடி. வெளியில இருந்து பாக்கிறவைக்கு நாங்கள் ஏதோ செல்வச் செழிப்பில இருக்கிற மாதிரி தெரியும். ஆனால் எங்கட சம்பளத்தில இப்ப முக்கால்வாசி, பெற்றோலுக்குத்தான் காணும். மிச்சக் காசில தான் வீட்டுக்கும் குடுக்க வேணும், எங்களிட்ட உதவிகேட்டு வாற ஆக்களுக்கும் இதில இருந்துதான் குடுக்கோணும், அதைவிட ஏதும் விழாக்களுக்கு விருந்தினராகக் கூப்பிட்டால், அந்த அமைப்புக்கும் ஏதும் உதவி செய்ய காசு குடுக்கவேணும். இப்பிடி எல்லாப் பக்கமும் எங்களுக்குத்தான் பெரும் செலவு. இப்பிடியான செலவுகளை பார்லிமெண்ட் காசில மட்டும் சமாளிக்க ஏலுமோ? அதால கடனில தான் வாழ்க்கை ஓடுது' எண்டு தமிழ் எம்.பிமார் புலம்புகினம்.

அவைக்கெல்லாம் சொல்ல ஒண்டிருக்கு. "இவ்வளவு செலவு வைக்கிற, கஷ்டப்படுத்திற எம்.பி பதவியை எதுக்கு வீணாக் கட்டிப்பிடிச்சுக் கொண்டு இருக்கிறியள். பேசாமல் ரிசைன் பண்ணிட்டு போகலாமே?" இவைக்கு பதவியும் வேணும். காசு செலவழிக்காமல் கெத்தா இருக்கவும் வேணும். எல்லாத்துக்கும் ஆசைப்பட்டால் கடைசியா கவிண்டு கொட்டுண்ட வேண்டியதுதான்.



- பட்சி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்

# காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதிகோரி நேற்றுப் போராட்டம்!





**வவுனியா, ஜுன் 24**

**வவுனியா ஏ-9 வீதி, தபால் திணைக்கள அலுவலகத்துக்கு அருகாமையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர் போராட்டத்தின் 1950ஆவது நாளான நேற்றையதினம், சிறப்புக் கவன வீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.**


இந்தப் போராட்டம் தொடர்பில் அவர்கள் தெரிவித்ததாவது:

இலங்கையின் பொருளாதாரம் தற்போது மிகவும் நலிவடைந்துள்ளது. இலங்கை நாளுக்குநாள் வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றது. இந்தப் பொருளாதார நெருக்கடி, சிங்கள அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தியிருக்கின்றது. 1957ஆம் ஆண்டிலிருந்து சிங்களவர்கள் எமக்கு இழைத்த ஒவ்வொரு அட்டூழியத்தின் அடிப்படையிலும், எமது தாயகத்தில் தமிழர்களின் வாழ்க்கைக்கும் வாழ்வாதாரத்துக்கும் சிங்களவர்கள் எதிரிகளாக இருந்து வருகின்றனர். இப்போது எமது எதிரி மிகவும் பலவீனமாக இருக்கின்றான். அழிந்து வரும் இலங்கையில் இருந்து எங்களை விடுவிக்க இதுவே சிறந்த நேரம்.

எம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒன்றுபட்ட பிரேரணையை முன்வைக்கும் நேரம் இது. எங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க பொதுவாக்கெடுப்பு நடத்தலாம். தமிழ் எம்.பிக்கள் புலம்பெயர் தமிழர்களைப் பின்பற்ற வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஏனெனில் அவர்கள் புத்திசாலிகள், நன்கு படித்தவர்கள், பணக்காரர்கள், சுதந்திரமாக சிந்திக்கக் கூடியவர்கள். கடந்த கால வரலாறுகளின் அடிப்படையில் நடைமுறை தீர்வுகளை அவர்களால் பரிந்துரைக்க முடியும்.

புலம்பெயர் தமிழ் மக்கள் எம்மீது அக்கறை கொண்டுள்ளமைக்காகவும், எமது தாயகத்தின் விடுதலைக்கான கோரிக்கைக்காகவும் இலங்கையின் 52 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனை அடைக்கத் தயாராகவுள்ளமைக்காகவும் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

போரின் காரணமாக புலம்பெயர் தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறினர், இலங்கையில் எங்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முழு உரிமை அவர்களுக்கு உள்ளது - என்றனர். (ம-14,110)



## யாழ். கடற்றொழில் பிரதிநிதிகளுடன் கனேடியத் தூதுவர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜுன் 24

சிறிலங்காவுக்கான கனேடிய நாட்டுத் தூதுவர் மெக்கினன் டேவிட், யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனப் பிரதிநிதிகளை நேற்றுமுன்தினம் யாழ். நகரிலுள்ள தனியார் விடுதியொன்றில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதன்போது வடக்குக் கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், நவீன மீன்பிடி முறைமை மற்றும் கடற்றொழில் உபகரணப் பற்றாக்குறை ஆகியவை தொடர்பில் தூதுவருக்கு தெளிவுபடுத்தப்பட்டது. அவர் அவை தொடர்பில் பரிசீலிப்பதாகத் தெரிவித்தார்.

சந்திப்பில் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன தலைவர் அ.அன்னராசா, செயலாளர் நா.வர்ணகுலசிங்கம் உள்ளிட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ச-20)

### தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்ற

## சமுர்த்திப் பயனாளிகள் வெளிநாடு செல்ல வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜுன் 24

தொழிற்பயிற்சி அதிகார சபையால் நடத்தப்பட்ட தொழிற்பயிற்சி சான்றிதழ் பெற்றுள்ள குறைந்த வருமானம் பெறும் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படவுள்ளனர்.

சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை ஆகியவை இணைந்து இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. முதல் கட்டமாக ஜப்பான் நாட்டுக்கு ஒரு தொகுதியினரை அனுப்ப சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் தகைமையுள்ளவர்களின் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட சமுதாய அடிப்படையிலான அமைப்பின் உறுப்பினராகவும், உடல், உள ஆரோக்கியம் உள்ளவராகவும், உடலில் பச்சை குத்தியமைக்கான அடையாளம் இல்லாத குறைந்த வருமானம் உடைய குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இந்த திட்டத்தில் இணைக்கப்படவுள்ளனர்.

இதற்கமைய ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தகைமையுள்ள இருவரைத் தெரிவு செய்து அனுப்பி வைக்குமாறு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தால் அனைத்துப் பிரதேச சமுர்த்தி அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-14.9)

## சேக்கிழார் குருபூஜையும் பரிசில்கள் வழங்கலும்

யாழ்ப்பாணம், ஜுன் 24

சிறார்களிடையே நாவலர் பெருமான் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ்.மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்த சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூஜை நிகழ்வும்' சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது 'சேக்கிழாரின் பணி சைவத்தின் நிலைப்பு' எனும் தொனிப்பொருளில் இளம் சைவப்புலவர் நித்தியபாபு தரன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். பின்னர் சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

இந்து கலாசார உத்தியோகத்தர் திருமதி கிருஷ்ணகுமாரி சிவானந்தன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி சுகன்யா அரவிந்தன், சிறப்பு விருந்தினராக அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் தலைவர் சி.கா.கமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச)



பரந்தன் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு எரிபொருள் வருகின்றது என்று நேற்றுமுன்தினம் தகவல் பரவிய நிலையில், எரிபொருளைப் பெற்றுக் கொள்வதற்காக பொதுமக்கள் பலர் நீண்ட வரிசையில் காத்திருந்தனர். (ச-113)

# கழிவகற்றும் வாகனம் மட்டுப்படுத்தப்பட்டு கழிவகற்றும் கட்டண அறவீடு அதிகரிப்பு

சாவகச்சேரி, ஜுன் 24

எரிபொருள் தட்டுப்பாட்டால் சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்படும் கழிவு சேகரிக்கும் வாகனங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, மரக்கிளைகள் மற்றும் தென்னோலைகள் அகற்றும் பணிக்காக அறவிடும் கட்டணத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. சாவகச்சேரி நகரசபையின் அமர்வு நேற்று நடைபெற்றபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தால் சபையின் வரவு- செலவுத் திட்ட அறிக்கையில் ஒதுக்கப்பட்ட நிதிக்கும் மேலதிகமாக செலவிட வேண்டியுள்ளது என்று சபையின் கணக்காளர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான மேலதிக செலவுகளை சமாளிக்க செலவுகளைக் குறைக்க வேண்டும் எனும் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இதனையடுத்து தினமும் வீதியோரங்களில் காணப்படும், கழிவுகளை சுகாதார மேற்பார்வையாளர்கள் பார்வையிட்டு அறிக்கை வழங்கும் பட்சத்தில் அந்த வீதியில் உள்ள கழிவுகளை அப்புறப்படுத்த வேண்டும் அத்துடன் குடியிருப்பாளர்கள் கோரும் பட்சத்தில் மரக்கிளைகள் மற்றும் தென்னோலைகளை அப்புறப்படுத்தும் கட்டண அறவீட்டை அதிகரிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ம-14.9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எரிபொருள் விநியோகத்தில் இராணுவத்தின் தலையீடு தேவையற்றது!

## சட்டத்தரணி சிறீகாந்தா சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஜூன் 24

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் இராணுவத்தின் தலையீடு தேவையற்றது என்று தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சட்டத்தரணி சிறீகாந்தா வலியுறுத்தியுள்ளார்.

அவரால் ஊடகங்களுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைக்கப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாடு எதிர்கொண்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டால் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் பெரும் குழப்பநிலைகளும் பல்வேறு வன்முறைச் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றன. எரிபொருளுக்காக அனைத்து வேலைகளையும் விட்டு மக்கள் நாள்கணக்கில் வரிசைகளில் காத்திருக்கின்றனர்.

இதன்போது பொதுமக்கள் மத்தியில் சில வேளைகளில் முரண்பாடுகளும் சச்சரவுகளும் ஏற்படுவது ஆச்சரியமானது அல்ல.

இந்த நீண்ட வரிசைகளில் ஒழுங்குமுறைகளை மீறி, சமூகப் பொறுப்பற்று செயற்படும் பல நபர்களும் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கின்றனர். இதனால் சகல எரிபொருள் நிலையங்களும் விநியோக நடவடிக்கைகளை நேர்மையாக மேற்கொள்வதாக கருதமுடியாமல் உள்ளது.

எரிபொருளுக்கான நீண்ட வரிசைகளில் சில சந்தர்ப்பங்களில் ஏற்படும் அமைதியின்மையைக் கையாள்வதற்கு இராணுவத்தை ஈடுபடுத்தும்போது பிரச்சினை மோசமடைவதையும் கண்மூடித்தனமான அடக்குமுறை விஸ்வரூபம் எடுப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

கடந்த 18 ஆம் திகதி முல்லைத்தீவு, விசுவமடுவில் பொதுமக்களுக்கும் இராணுவத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதலும், அதை அடுத்து ஏவப்பட்ட அடக்குமுறை அட்டகாசமும் இந்த நெருக்கடியான கால கட்டத்தில் இனிமேலும் நிகழக் கூடாது. எனவே எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் இருந்து இராணுவத்தை முற்றாக விலக்கிக் கொள்வதன் மூலமே அடக்குமுறைகள் நிகழாமல் இருப்பதை உறுதிப்படுத்த முடியும்.

எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பு பொலிஸ் துறைக்கே உரியது. இதில் இராணுவத் தலையீடு தேவையற்றது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் இதுவே பொருத்தமான அணுகுமுறை என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எரிபொருள் விநியோக விடயத்தில் சகலரின் ஒத்துழைப்பையும் கோரியுள்ள வட மாகாண ஆளுநர், இதைக் கவனத்திற்கொள்ள முன்வர வேண்டும் என விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ம-14.26)

### வசதி படைத்தோருக்கு,

## நள்ளிரவில் எரிபொருள் விநியோகம்; நால்வர் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

எரிபொருள் நிலையத்தில் நள்ளிரவில் வசதி படைத்தோருக்கு எரிபொருள் விநியோகிக்கப்பட்டபோது பொதுமக்களால் நால்வர் மடக்கிப்பிடிக்கப்பட்டு பருத்தித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வடமராட்சி பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் கடந்த 20 ஆம் திகதி நள்ளிரவு வேளை சில வசதி படைத்தோரின் வாகனங்கள் மற்றும் கொள்கலன்களில் டீசல் நிரப்பப்படுவதாக பொது மக்களுக்குத் தகவல் கிடைத்தது.

அதனையடுத்து மக்கள் குறித்த எரிபொருள் நிலையத்தை முற்றுகையிட்டு நால்வரை மடக்கிப்பிடித்து பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். எனினும் மூவர் உடனடியாக விடுவிக்கப்பட்டதாக மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைத் தொடர்புகொண்டபோது, குறித்த நபர்களைப் பொலிஸ் பிணையில் விடுவித்ததாகவும் அவர்கள் குறித்த திகதியில் நீதிமன்றத்தில் முன்னிலையாகவுள்ளனர் என்றும் தெரிவித்தனர். (ம-14.20)

### எரிபொருள் நிலையத்தில்

# தரக்குறைவாக ஏசியதால் பெண் பதிலதிபர் போராட்டம்

## கிளிநொச்சியில் சம்பவம்



**கிளிநொச்சி, ஜூன் 24**

**கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில், அரச அலுவலர்களைத் தரக்குறைவாக ஏசியதால் எரிபொருள் பெறவந்த பதிலதிபர் ஒருவர் தனது பிள்ளையுடன் நேற்றுக் காலை போராட்டத்தில் ஈடுபட்டார்.**

குறித்த எரிபொருள் நிலையத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் வழங்கப்பட மாட்டாது என எரிபொருள் நிலைய ஊழியர்களால் அறிவுறுத்தப்பட்டது. இதன்போது எரிபொருள் பெற்றுக்கொள்ள வந்த சிலர், அரச உத்தியோகத்தர்களை தரக்குறைவாகப் பேசியுள்ளனர். இதையடுத்தே அந்தப் பெண் பதிலதிபர் இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டார்.

'கடமைக்குச் செல்லாவிட்டால் விடுமுறையாக்கப்படுகிறது. கடமைக்குச் செல்ல வந்த என்னைத் தரக்குறைவாக பேசுகின்றனர். கல்வி வேண்டாம், பெற்றோலே வேண்டும் என்கின்றனர். ஆசிரியர்கள் என்றால் தரக்குறைவானவர்கள் இல்லை. உங்கள் பிள்ளைகளுக்கே நாம் கல்வியைப் புகட்டுகின்றோம்.

இவ்வாறு சென்றால் பிள்ளைகள் முதல் எழுத்தைக் கூட அறியாதவர்களாக வளர்வார்கள். எங்களுக்கு முறையான எரிபொருள் கிடைக்க வேண்டும். இல்லையேல் கற்பித்தல் செயற்பாட்டை முன்னெடுக்க முடியாது. நாகரிகமின்றி தரக்குறைவாக பேசுமளவுக்கு ஆசிரியர்கள் இல்லை. இதற்கு நியாயமான தீர்வு வேண்டும். அதுவரை ஆசிரியர்கள் பணிக்குச் செல்லாது போராட வேண்டும்.

இது தொடர்பில் கல்வி அமைச்சர் மற்றும் ஆசிரியர் தொழிற்சங்கத்துக்கு அறிவித்துள்ளேன். நிரந்தரமான தீர்வு கிடைக்கவேண்டும். எமது கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும்' என்று போராட்டத்தில் ஈடுபட்ட அந்தப் பதில் அதிபர் தெரிவித்தார்.

போராட்டப் பகுதிக்கு விரைந்த பொலிஸார் மற்றும் பொதுமக்கள் சிலர், பதிலதிபருடன் கலந்துரையாடி போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியிருந்தனர். இதனையடுத்து இதற்கு நிரந்தர தீர்வு எட்டப்படவேண்டும் எனக் கூறி போராட்டம் கைவிடப்பட்டதுடன், பதிலதிபர் பாடசாலைக் கடமைக்குச் செல்வதற்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையும் எடுக்கப்பட்டது. (ம-14.113)

## ஏனைய அரச அலுவலர்களுக்கு எரிபொருள் வழங்க நடவடிக்கை

### மாவட்டச் செயலர் உறுதி



யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஏனைய அரச திணைக்கள அலுவலர்களுக்கும் எரிபொருள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று யாழ். மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை பிரதேச செயலக அலுவலர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் எரிபொருள் வழங்கப்பட்டது. எனினும் ஏனைய திணைக்கள அலுவலர்கள் எரிபொருள் நிலையத்தில் காத்திருந்து எரிபொருள் இல்லாததால் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலரிடம் வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரதேச செயலகங்கள் சிலவற்றால் தமது பிரதேசங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஏனைய அரச திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கும் தேவை அடிப்படையில் எரிபொருள் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-14.20)

### தெல்லிப்பழை மருத்துவமனைக்கு

## தூரப்பிரதேசங்களில் இருந்து வருவோருக்கு இலவச திட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு புற்றுநோய் மற்றும் உளநோய் சிகிச்சைக்கு தூரப் பிரதேசங்களிலிருந்து வருகை தருவோருக்கு சைவ அறப்பணி நிதியத்தால் இலவச விசேட திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

அதன்படி மருத்துவமனைக்கு நோயாளிகளை தூரப் பிரதேசங்களிலிருந்து அழைத்துவருவோரின் போக்குவரத்து நெருக்கடியைக் கருத்திற்கொண்டு தங்குமிட வசதி மற்றும் உணவு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

தெல்லிப்பழை மருத்துவமனைக்கு அருகே வீரபத்திரர் வீதியில் சிவ வீரபத்திர ஈச்சர மற்றும் மானிடம் வளாகத்திலே இந்த வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் நோயாளர்களுக்கு தெல்லிப்பழை மானிடம் அறக்கட்டளை நிதியத்தால் தயாரிக்கப்படும் தானியக் கலவையான சத்துமா கொடுக்கப்படவுள்ளது.

இந்தச் சேவைக்கு தன்னார்வலர்கள் அன்பளிப்புச் செய்யவிரும்பின் எம்மை தொடர்புகொள்ள முடியும் எனவும் சைவ அறப்பணி நிதியம் அறிவித்துள்ளது. (ச-125)

## பிரதேச செயலக அலுவலர்களுக்கு எரிபொருள் அட்டை

பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு எரிபொருள் பெறுவதற்குரிய அட்டைகள் மாவட்டச் செயலகத்தால் பிரதேச செயலகங்களுக்கு நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அலுவலர்களுக்கான பங்கீட்டு அட்டை அவர்கள் கடமையாற்றும் அந்தந்த அலகின் தலைவர் மற்றும் திணைக்களத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்றது.

இதேவேளை பொதுமக்கள் எரிபொருள் பெறுவதற்குரிய அட்டை இன்னும் வரவில்லை. அவை வந்ததும் அந்தந்த கிராம அலுவலர் ஊடாக எரிபொருள் அட்டை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (ம-14.9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமத்தில் வாள்வெட்டு

## இளைஞர் காயம்!

சாவகச்சேரி, ஜூன் 24

கொடிகாமம் கச்சாய் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி அஞ்சலக வீதியைச் சேர்ந்த திருப்பதி டிலக்சன் (வயது 26) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

குறித்த இளைஞர் தனது சகோதரருடன் கொடிகாமம் கச்சாய் வீதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்ற வேளையில், ஒரு கும்பல் அவர்களை வழிமறித்து இளைஞர் மீது வாள் வெட்டுத் தாக்குதலை மேற்கொண்டது.

இதன்போது காயமடைந்த இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

(ம-14-9)

### தென்மராட்சியில்

# பயிர்ச்செய்கையை மேற்கொள்ள குரங்குகள் சரணாலயம் அவசியம்

## தவிசாளர் வாமதேவன் சுட்டிக்காட்டு

**கொடிகாமம், ஜூன் 24**

**தென்மராட்சியில் குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு குரங்குகள் சரணாலயம் அமைத்தல் அல்லது அதற்குரிய மாற்றுவழியை உருவாக்குதல் வேண்டும். இதனைச் செயற்படுத்தாவிடின் தென்மராட்சியில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்வது சாத்தியமில்லை என சாவகச்சேரிப் பிரதேசசபையின் தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார்.**

சாவகச்சேரி பிரதேசசபையின் மாதாந்த சபை அமர்வு கடந்த திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள தென்மராட்சியில் பத்து லட்சம் மரவள்ளித் தடிகளை நடும் திட்டம் சபையில் எடுக்கப்பட்டது.

எனினும் இந்தப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும்வேளை குரங்குகள் பயிர்களை அழிப்பதால் பெருமளவில் பாதிப்பு உண்டாகும். குரங்குகளைக் கட்டுப்படுத்தி தீர்வு எட்டிய பின்னரே இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

ஆனால், அதுவரை காத்திராது இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். முடிந்த வரை பாடுபட்டு இந்தத் திட்டத்தை வெற்றிபெறச் செய்வோம்.

இவற்றுக்குத் தீர்வாக குரங்குகள் சரணாலயம் அமைக்க வேண்டுமென அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகள், விவசாயத் திணைக்களம் ஆகியவற்றுக்கு மக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது. குரங்குகளைக் கட்டுப்படுத்த விவசாயத் திணைக்களம், கமநல சேவை நிலையங்கள் உள்ளிட்ட அரச திணைக்களங்கள் இணைந்து குரங்குகள் சரணாலயம் அமைத்தல் அல்லது மாற்று வழியைக் கண்டுபிடித்தல்தான் சிறந்த சவாலான நடவடிக்கையாகும்.

இது தொடர்பில் மாவட்டச் செயலருக்கு முழுமையான திட்டம் ஒன்றை அனுப்பியுள்ளேன். மாவட்டச் செயலர் குரங்குகள் சரணாலயம் அமைத்தல் தொடர்பாக செயற்பாட்டை மேற்கொண்டு மக்களின் விவசாயத்தை பாதுகாக்க தீர்வு நடவடிக்கை எடுப்பார் என நம்புகிறேன் - என்றார்.

(ச-159)

### பஸ்ஸில் தவறவிட்ட 96,000 ரூபாவை

# உரியவரிடம் மீட்டுக்கொடுத்த பொலிஸாருக்கு பாராட்டுக்கள்


யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பஸ்ஸில் தவறவிட்ட 96 ஆயிரம் ரூபாவை, உரியவரிடம் மீட்டுக்கொடுத்த பொலிஸாருக்கு பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கிச்சென்ற பஸ்ஸில் ராஜலட்சுமி சௌந்தர்ராஜன் (வயது 62) என்பவர் பயணித்துள்ளார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இறங்கி, வங்கியிலிருந்து மீளப்பெற்ற 96 ஆயிரம் ரூபாவை பையினுள் பார்த்தபோது பணத்தைக் காணவில்லை. அதனையடுத்து அவ்விடத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த யாழ்.மாவட்ட பிராந்திய போக்குவரத்துப் பொலிஸார் இருவரிடம் இது தொடர்பில் முறையிட்டார்.

பொலிஸார் பெண்ணின் தேசிய அடையாள அட்டையை வாங்கி அவர் பயணித்த பஸ்ஸை கொக்குவில் பகுதியில் வழிமறித்து சோதனையிட்டனர். இதன்போது பணத்தொகை ஆசனத்தின் கீழே இருந்து மீட்கப்பட்டு குறித்த பெண்ணிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ம-14-125)



# மோ. சைக்கிள் – கார் விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, ஜூன் 24

வவுனியா- நொச்சிமோட்டைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்- கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் வவுனியா - பறனட்டகல் கிராமத்தைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் (வயது 42) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் ஓமந்தையிலிருந்து பறனநட்டகல் நோக்கி தனது மைத்துனருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்றவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மைத்துனர் படுகாயங்களுடன் வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தை ஏற்படுத்திய கார் தப்பிச் சென்றநிலையில் ஓமந்தைப் பொலிஸார் இலக்கத்தகட்டின் அடிப்படையில் காரைக் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ச-110)

# குடும்பச் செலவை மீதப்படுத்த வீட்டுத்தோட்டம் செய்யுங்கள்

## உடுவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆலோசனை

யாழ்ப்பாணம், ஜூன் 24

நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ள வீட்டுத்தோட்டம் செய்வதன் மூலம் குடும்ப வருமானத்தின் பெரும்பகுதியை மீதப்படுத்த முடியும். அத்துடன் நஞ்சற்ற போசாக்கான உணவையும் பெற்றுக் கொள்ளமுடியும் என்று தெரிவித்தார் உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து பிரதேசம் தோறும் நடத்துகின்ற வீட்டுத்தோட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு அண்மையில் தாவடி வடக்கு கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே உடுவில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போர்க்காலத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியுடன் பலர் தற்போதைய நெருக்கடியை ஒப்பிடுகின்றனர். ஆயினும் போர்க்காலத்தில் நாட்டைக் கட்டியமைக்கக் கூடிய அரசாங்கம் இருந்தது. உலகப்பொருளாதாரம் வலுவாகக் காணப்பட்டது.

இன்றைய நிலை அவ்வாறல்ல. நாட்டின் பொருளாதாரத்துடன் உலகப்பொருளாதாரமும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளது.

ஆகவே, இதனைக் கருத்திற்கொண்டு நாம் வீட்டுப் பொருளாதார தன்னிறைவாக்கல் முயற்சியில் ஈடுபடவேண்டும். வீட்டுத்தோட்டம் செய்வதன்மூலம் மரக்கறிகளுக்கு செலவளிக்கும் பணத்தை மீதப்படுத்துவதுடன் போசாக்கான நஞ்சற்ற உணவையும் பெற்றுக்கொள்ள முடியும் -என்றார்.

(ம-ச)

# வீதியில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை பொலிஸாரால் உரியவரிடம் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாணம் ஏ-9 வீதியில் கண்டெடுக்கப்பட்ட கைப்பை வீதிப் போக்குவரத்து பொலிஸாரால் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் கடந்த 21ஆம் திகதி கடமையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மாவட்ட வீதிப் போக்குவரத்துப் பொலிஸார் இருவர், வீதியில் கைப்பை ஒன்று கிடப்பதை அவதானித்து அதை சோதனையிட்டனர்.

இதன்போது கைப்பையில் 38 ஆயிரம் ரூபா பணம் தேசிய அடையாள அட்டை, அலைபேசி இலக்கம் ஆகியன கிடைக்கப்பெற்றன. அதனையடுத்து கைப்பையைத் தவறவிட்டவர் பாரதி வீதி, அச்சுவேலி பகுதியைச் சேர்ந்த முருகையா சசிதரன் என்பவர் என அடையாளம் காணப்பட்டு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸாரின் இந்தச் செயலுக்கு மாவட்ட போக்குவரத்து பொலிஸ் பிரிவு பாராட்டுத் தெரிவித்துள்ளது.

(ம-14-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## தீராத சாபக்கேடு!

மூத்ததமிழ்க்குடிகள், முல்லைத்தீவு– குருந்தூர்மலையில் ஆதிசிவன் ஆலயம் அமைத்து வழிபட்ட இடத்தில், புத்தரைப் புகுத்த எடுத்த முயற்சிகள், தமிழர்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பால் பிசுபிசுத்துப் போனமை நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சருமான சரத் வீரசேகரவை மிகையாகவே புகைச்சலுக்கு உட்படுத்தியிருக்கின்றது. இதன் விளைவாக, 'சிங்களவர்களின் பொறுமையைச் சோதிக்க வேண்டாம்' என்ற நேரடியானதும் அதே நேரம் மறைமுகமானதுமான எச்சரிக்கையை அவர் நாடாளுமன்றத்தில் வைத்து தமிழர் தரப்புக்கு விடுத்துள்ளார்.

சிறிலங்காவில் கடைந்தெடுத்த இனவாதியான வீரசேகரவிடம் இருந்து, இத்தகைய கீழ்த்தரமானதும் சகதித் தன்மையுள்ளதுமான சிந்தனை வெளிப்படுவதில் ஆச்சரியத்துக்கொன்றும் இல்லை. ஆனால், அவர் தன்னிலை மறந்தும், தன் தாயகத்தின் நிலையை உணராதவராகவும் தமிழர் தரப்பை மிரட்டும்படியான கருத்துக்களை முன்வைப்பதென்பது வேடிக்கைக்கு உரியதொன்றே. அமைச்சராக இருப்பதற்கு மட்டுமல்ல குறைந்தபட்சம் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதற்குக்கூட சரத் வீரசேகரவுக்குத் தகுதியோ திராணியோ இல்லை என்பதும் இதிலிருந்தே மெய்ப்பிதமாகின்றது.

வீரசேகரவின் சிந்தனை மட்டத்தின்படி, குருந்தூர் மலைப் பகுதியில் எந்தக் கட்டுமானங்களையும் மேற்கொள்ளக்கூடாது என்ற நீதிமன்றத்தின் உத்தரவு, படைத்தரப்பால் மீறப்பட்டுள்ளமையும், அங்கு புத்தரை வலிந்து குடியமர்த்தும் முயற்சிகளில் பிக்குகள் கடும் முனைப்புக் காட்டியமையும் சரியானது, ஆனால் அதைத் தமிழர் பிரதிநிதிகள் ஓரணியில் நின்று தடுத்தமைதான் தவறு. இதே சிந்தனைதான் இன்று இந்த நாட்டின் மனித, பொருளாதார, சமூகப் பேரவலங்களுக்குக் காரணம்.

இலங்கை சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து சிங்களப் பேரினவாதம் வெளிப்படுத்திவந்த துவேசத்தின் உச்சம்தான் ஆயுதப் போராட்டமாக இந்தத் தீவில் வெடித்தது. மூன்று தசாப்தத்துக்கும் மேலாக இடம்பெற்ற இந்த நீண்ட நெடிய போர் தந்த குருதிச் சகதியும், வடுக்களும், வலிகளும் ஏராளம். போரின் தடயங்கள் இன்னும் அழியவில்லை, சிந்தப்பட்ட குருதி இன்னும் காயவில்லை. ஆனால், அதற்குள் அடுத்தவொரு மனிதப் பேரவலத்துக்கான அத்திபாரத்தை வீரசேகர போன்றவர்கள் பலமாக அமைத்துக் கொண்டிருக்கின்றனர் என்பது மட்டும் திண்ணம்.


போராலும், தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் விட்டதாலும்தான் இந்த நாடு இன்று இவ்வளவு பெரிய பொருளாதார அழிவைச் சந்தித்துள்ளது என்று நிபுணர்களும் புத்திஜீவிகளும் மாறிமாறி எச்சரித்துக் கொண்டிருக்கையில், வீரசேகர போன்றவர்கள் அலங்கரிக்கும் நாடாளுமன்றக் கதிரைகளால் இந்த நாடு எவ்வாறுதான் மீட்சியை நோக்கிப் பயணிக்கும்? இந்த நலிவு நிலைக்கான குறைந்தபட்ச சிந்தனைகூட அவர்களுக்கு இல்லை, குறைந்தபட்ச புரிதலை வெளிப்படுத்தக்கூட அவர்கள் தயாரில்லை. இத்தகைய சாபக்கேடான தலைமைகள் இருக்கும் வரைக்கும் இலங்கைக்குரிய விடிவெள்ளி தீவின் நாலாதிசைகளிலும் இம்மியும் தெரியப்போவதில்லை. கடன், இனவாதம், ஊழல், வன்மம் போன்றவற்றால் இந்தத் தீவு இன்னுமின்னும் அமிழத்தான் போகின்றது.

கே.ஜி.எப். திரைப்படத்தில் ஒரு வசனம் வரும். 'இங்கு கிரீடங்கள்தான் நிரந்தரம்: தலைகள் அல்ல'. அதில் 'கிரீடம்' என்ற சொல்லைத் தூக்கிவிட்டு 'இனவாதம்' என்ற சொல்லைப் புகுத்திவிட்டால் அது இலங்கைக்கு கச்சிதப் பொருத்தம். 'இங்கு இனவாதம்தான் நிரந்தரம்: தலைகள் அல்ல'. ஜே.ஆர். முதற்கொண்டு வீரசேகர வரையில் இந்தக் கதையே நீட்சியானது – தொடர்ச்சியானது.

### நாளொரு நல்வார்த்தை

" எதிர்காலத்தைப் பற்றி பயம் கொள்ள வேண்டாம். அதை உருவாக்கத்தான் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம்"

- பராக் ஒபாமா



# என்னிடம் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆட்சியைப் பிடிக்கத் தெரியவில்லை

## பிரதமர் ரணில் 'நக்கல்'

**கொழும்பு, ஜீன் 24**



**என்னிடம் பயிற்சி பெற்றவர்கள் எவ்வாறு ஆட்சியைப் பிடிப்பது என்று தெரியாது இருப்பதை எண்ணி நான் கவலையடைகின்றேன் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்துள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

"இவர்களிடம் ஆட்சியைக் கொடுத்தாலும் ஓடி ஒளிகின்றனர். எதிர்க்கட்சியில் இருந்தாலும் ஓடி ஒளிகின்றனர். இவர்களை நினைத்துக் கவலையடைய வேண்டியுள்ளது. எனினும், நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் இருந்தால் எதிர்க்கட்சியினர் தயக்கம் இன்றி சமர்ப்பிக்க முடியும். அவை நல்லதாக இருந்தால் மக்கள் அவர்களிடம் ஒப்படைப்பார்கள்" - என்றார். (ம-22)

# வனஜீவராசி திணைக்களத்திடமிருந்து எமது நிலங்களை மீட்டுத் தாருங்கள்

## திருமலையில் மக்கள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, ஜுன் 24



திருகோணமலை கோமரங்கடவெல பிரதேச செயலகத்துக்கு முன்பாக, 'காணி சுவீகரிப்பை நிறுத்தி எமது விவசாயக் காணிகளை பெற்றுத் தாருங்கள்' என்று வலியுறுத்தி பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

போர்க்காலத்தின்போது எமது விவசாயக் காணிகளை இழந்த நிலையில் அதனைத் தற்போது வனஜீவராசிகள் திணைக்க ளத்தினர் அடாத்தாக சுவீக ரித்துள்ளனர். அத்துடன் எமது காணிகளில் பயிர்ச்செய்கைளை மேற்கொள்ள விடாது தடுத்துள்ளனர். இதனால் எமது அன்றாட ஜீவனோபாயமான விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினரிடமிருந்து எமது சொந்தக் காணிகளை மீட்டுத்தர நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ச-இ)

நாளை 25.06.2022 சனிக்கிழமை ஆனி 11


சுபநேரம் : 02.55 - 04.25
ராகுகாலம்: 08.55 - 10.25

கார்த்திகை விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீதாஞ்சலி சிங்கராசா
*41ஆம் மருத்துவபீட மாணவி,*
*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*

# ஆரோக்கியமான வாழ்வுக்கு கல்லீரல் என்னும் கவசம்!




எமது உடலில் அதிக வேலை செய்யும் உறுப்பு என்றால் அது கல்லீரலே. இது உணவுக்களை ஜீரணிக்க உதவுகிறது. உடலில் உள்ள விஷங்களை நீக்கவும் எமது உடலில் ஆற்றலை சேமிக்கவும் உதவுகிறது. இந்தக் கல்லீரலில் அதிகமாகக் கொழுப்பு தேங்குவதால் ஏற்படும் நிலை கொழுப்பு கல்லீரல் எனப்படும். அதாவது சுமார் 75 வீதமான கல்லீரல் திசுக்கள் சேதம் அடையும்பொழுது கல்லீரல் பாதிப்படைகிறது. மூளை மற்றும் இதயத்துக்கு அதிகபடியாக கல்லீரல் எமது உடலில் பல இயக்கங்களைக் கவனித்துக்கொள்கிறது. எனவே, இது சரியாக செயற்படாதபோது எமது உடலில் பல இயக்கங்கள் பாதிக்கப்படும். சிறிய அளவிலான கொழுப்பு கல்லீரலில் படிவதால் அது எந்தவித ஆபத்தையும் ஏற்படுத்தாது. ஆனால், அதிகபடியான கொழுப்பு படியும் பொழுது அது மிகப்பெரிய உடற்பிரச்சினைகளை ஏற்படுத்தும். இது இரண்டு வகைப்படும்.

அவையாவன, அதிகமாக மது அருந்துவதால் ஏற்படும் 'அல்ககாலிக் பேட்டீலிவர்' மற்றும் கல்லீரலில் கொழுப்பு மேலும் படிவதால் ஏற்படும் 'நான் அல்ககாலிக் பேட்டீலிவர்' ஆகும்.

### நோய்நிலைக்கான காரணம்

எமது உடலில் சேரும் கொழுப்பைச் சரியாக வளர்சிதை மாற்றம் செய்யமுடியாத நிலையில் கொழுப்பு கல்லீரலில் படிகிறது. இந்த நோய் ஏற்படுவதற்கு பல முக்கியமான காரணங்கள் உள்ளன. அவற்றுள் சில,

- உடற்பயிற்சியின்மை
- மதுபழக்கம்
- அதிக உடல் பருமன்.
- ஆரோக்கியமற்ற உணவுப்பழக்கம்
- நீரிழிவு நோய்
- உயர் குருதியமுக்கம்
- பரம்பரைக் காரணிகள்
- சில மருந்துக்களின் பக்கவிளைவுகள்

என்பனவாகும். முதிர்ந்த வயதினரிடையே இந்த நோய் பொதுவானது. அதாவது இந்நோயால் 61 முதல் 70 வயதினரே பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கண்டறியப்பட்டது. கொழுப்பு கல்லீரல் நோய் பொதுவாக ஒரு அமைதியான நோய் மற்றும் எந்த குறிப்பிடத்தக்க அறிகுறிகளையும் ஏற்படுத்தாது. பொதுவான சோர்வு அல்லது பலவீனம், தசைப் பிடிப்பு அல்லது குமட்டல், குழப்பான மனநிலை, மூக்கில் இரத்தம் கசிதல், பசியின்மை மற்றும் எடை இழப்பு இந்த நோய் கொண்டவர்களுக்கு இருக்கலாம். பெரும்பாலான இந்த நோயுடைய மக்கள் இந்த நோய் அறிகுறிகளைக் கவனத்தில் கொள்ளுவதில்லை. கல்லீரலில் வீக்கம், அழற்சி மற்றும் கல்லீரல் சேதம் போன்றவற்றுக்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கும்போது மட்டுமே கொழுப்பு கல்லீரல் நோய் வெளிகாட்ட ஆரம்பிக்கிறது. அதுமட்டுமன்றி இந்த நோய் பெரும்பாலும் ஏதேனும் ஒரு மருத்துவ பரிசோதனைக்காக செல்லும்போது பொதுவாக கண்டுபிடிக்கப்படுகிறது.

அதாவது வயிற்றை அழுத்திப் பார்க்கும்போது கல்லீரல் வீக்கமடைந்து உள்ளதுபோல் தெரிதல், இரத்தப் பரிசோதனைகள் மூலம் 'ஸ்கான்' பரிசோதனைகள் மூலம் பாதிப்படைந்த திசுக்களின் மாதிரியை எடுத்துப் பரிசோதனைக்கு உட்படுத்தி கல்லீரல் கொழுப்பு நோயை எளிதில் கண்டறியலாம்.

### சிகிச்சை முறைகள்

கொழுப்பு கல்லீரல் நோயின் வகையைப் பொறுத்தே சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இந்த நோய்க்கான சிகிச்சைகளாக நிலையான மருந்துகள் என்று எதுவுமில்லை. மிகவும் தீவிரமான நிலையில் மாத்திரம் அறுவைசிகிச்சை தேவைப்படும்.

'நொான் அல்ககாலிக் பேட்டீலிவர்' நோயாளிகளுக்கு எடை குறைப்பு பரிந்துரைக்கப்படுகின்றது.

எடைகுறைப்பானது கல்லீரலில் கொழுப்பு சேர்வதை, வீக்கம் மற்றும் பைபரோசிஸ் போன்றவற்றை குறைக்க உதவுகிறது.


அதுமட்டுமன்றி இந்நிலை நோயாளிகள் உடல் செயற்பாட்டை அதிகரிப்பதன் மூலம் கல்லீரலில் கொழுப்பு உட்பட உடலின் மொத்த கொழுப்பையும் குறைக்க உதவுகின்றது.

சுறுசுறுப்பாக இருப்பது என்பது NALFD மீது ஒரு பயனுள்ள விளைவுகளை தரும். இந்த நோய் சிகிச்சைகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட மருந்துகள் இல்லை.

ஆனால், நீரிழிவு மற்றும் விற்றமின் மருந்துகள் இந்நோய்க்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது மற்றும் இந்த நோயின் இன்னொரு வகையான 'அல்ககாலிக்' கொழுப்பு கல்லீரல் நோய்க்கான சிகிச்சையாக, முழுமையாக குடிப்பழக்கத்தை நிறுத்துவது என்பது அமைகின்றது.

மேலும் கொழுப்பு கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்டால் அதை திறம்பட சமாளிக்க சில வாழ்க்கைமுறை மாற்றங்களைச் செய்தால் இந்த நோயால் பாதிக்கப்படுவதைத் தடுக்கலாம். அதாவது,

- நாம் உண்ணும் உணவில் பழங்கள் மற்றும் காய்கறிகளை நான்கில் மூன்று பங்கு அடங்குமாறு சேர்த்துக்கொள்ளல்
- உணவில் அதிகளவிலான உப்பு, சர்க்கரையை தவிர்த்தல்




- உடல் எடை குறைப்பு உடற்பயிற்சிகளை மேற்கொள்ளல்
- நிறைவுற்ற கொழுப்பு உணவுகளுக்குப் பதிலாக mono unsaturated. poly unsaturated (தேவையற்ற கொழுப்பிலிருந்து பாதுகாப்பான) உணவுகளை சேர்த்தல்
- Hepatatis A, hepatitis B தடுப்பூசியை பெற்றுக் கொள்ளல்.

எனவே, இது போன்ற விடயங்களை எமது வாழ்வில் கடைபிடித்து எம்மை கொழுப்பு கல்லீரல் நோயில் இருந்து பாதுகாப்போம். ■

## வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க வவுனியாவில் நடமாடும் விற்பனை

வவுனியா, ஜூன் 23

பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்கும் வகையில் வவுனியாவில் விவசாயத் திணைக்களத்தினரால் நடமாடும் விற்பனை சேவை நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மரக்கறி விதைகள் மற்றும் பழப்பயிர்களின் விதைகள் என்பன விற்பனை செய்யப்பட்டன. (ம-110)





## கிளி.கண்டாவளையில் மாட்டுவண்டில் சவாரி

கிளிநொச்சி, ஜூன் 22

கிளிநொச்சி , கண்டாவளை, கோணங்குளம் கற்பகவிநாயகர் சவாரி திடலில் அண்மையில் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நடைபெற்றது.

கோணங்குளம் [illegible] சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் போட்டியில் அ, ஆ, இ, ஈ, உ என ஐந்து பிரிவுகளில் 115 சோடி காளைகள் களமிறக்கப்பட்டன. கிளிநொச்சி மாவட்டத்தில் அதிக காளைகள் பங்குபற்றிய சவாரிப்போட்டியாக இந்த போட்டி அமைந்துள்ளது. இதில் வெற்றியீட்டியவர்களுக்குத் தங்கப்பதக்கமும் பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்பட்டன. (ச-21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** இன்று மதியம் வரை இழுபறியாக இருந்து வந்த வேலை மாலையில் நல்லபடியாக முடியும். விசேஷம், விருந்து என பங்கேற்பீர்கள். மாலையில் மகிழ்ச்சியான செய்தி உங்களைத்தேடி வரும்.

**இடபம்:** திடீர் சுபச்செலவு ஏற்படும் . விழிப்புணர்வு தேவை. உறவினர் வீட்டு நிகழ்ச்சிகளில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். உங்கள் செயலில் கவனம் தேவை. புதிய சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம் :** தொழிலில் ஏற்பட்ட தடைகளைச் சரிசெய்வீர்கள். முயற்சி வெற்றியாகும். வேலை வாய்ப்புக்காக முயற்சி மேற்கொண்டவர்களுக்கு சாதகமான பதில் வரும்.

**கடகம்:** தொல்லை கொடுத்தவர்கள் விலகிச் செல்வர். நினைத்ததை சாதிப்பீர்கள். தொழிலில் உங்கள் கை மேலோங்கும். மனதில் நம்பிக்கை அதிகரிக்கும். சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.

**சிம்மம்:** இரண்டு நாள்களாக இருந்த சங்கடம் விலகும். உங்கள் முயற்சி பலிக்கும். புதிய முயற்சி பயன் தரும். நெருக்கடி விலகும். நன்மையான நாள். அலைச்சல் அதிகரித்தாலும் லாபம் காண்பீர்கள்.

**கன்னி:** மகிழ்ச்சியான சம்பவம் ஏற்படும். மாலையில் சிறுசிறு தடை செயலில் உண்டாகும். உங்கள் செயலில் கவனம் தேவை. வீண் அலைச்சல், செலவுகள் அதிகரிக்கும். புதிய முயற்சி வேண்டாம்.

**துலாம்:** நண்பர்களின் வழியே நன்மை காண்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பாலினரின் அன்புக்கு ஆளாவீர்கள். பணம் செலவாக வாய்ப்புள்ளது. கவனம் தேவை. வந்த பிரச் சினை முடிவுக்கு வரும்.

**விருச்சிகம்:** துணிச்சலுடன் செயற்பட்டு ஒரு வேலையை முடிப்பீர்கள். மேலதிகாரி பாராட்டுவார். உங்கள் செயல்களில் இருந்த தடை விலகும். நினைத்ததை நிறைவேற்றுவீர்கள். வேலையில் கவனம் தேவை .

**தனுசு:** தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர். புதிய சொத்துகள் வாங்கும் முயற்சி பலிதமாகும். பழைய நட்புகளால் சில பிரச்சினைகளை சந்திக்க நேரும். எச்சரிக்கை தேவை. போராடி வெற்றி காண்பீர்கள்.

**மகரம்:** அரசு வழியிலான முயற்சி இழுபறியாகும்.விழிப்புணர்வு தேவை. பொது நிகழ்ச்சிகளில் கவனம் தேவை. வம்பு, வழக்கு வேண்டாம். உங்களுடைய செயலில் பின்னடைவு ஏற்படும். மனம் சோர்வடைய வேண்டாம்.

**கும்பம்:** நேற்றைய செயலில் இன்று லாபம் உண்டாகும். உங்கள் முயற்சி வெற்றியாகும். மற்றவர்களுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டு நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். துணிச்சலும், தைரியமும் அதிகரிக்கும்.

**மீனம்:** பணம் பொருள்களைக் கையாளுவதில் கவனம் தேவை. விழிப்புணர்வு அவசியம். பிறர் மீதும் அனுதாபம் கொண்டு உதவி செய்வீர்கள். தெய்வீக சிந்தனை மேலோங்கும். வார்த்தைகளில் கவனம் தேவை,

# ஈரானில் நடப்பாண்டில் 105 பேருக்குத் தூக்கு

## ஐ.நா. கவலை



**ஜெனிவா,ஜுன் 24**

**ஈரானில் இந்த ஆண்டு ஜனவரி முதல் மார்ச் வரை மட்டும் 105 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் என ஐ.நா. கவலை தெரிவித்துள்ளது.**

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டம் அண்மையில் ஜெனிவாவில் நடைபெற்றது. இதில் ஐ.நா பொதுச்செயலாளர் அன்ரோனியோ குட்டரெஸினால் ஈரானின் தேவையற்ற மரணதண்டனைகள் குறித்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அந்த அறிக்கையில் உள்ளதாவது:

ஈரானில் தூக்கிலிடப்படுபவர்களின் பெரும்பாலானவர்கள் சிறுபான்மை குழுக்களைச் சேர்ந்தவர்கள். மிகக் கடுமையான குற்றங்கள் அல்லாத விடயங்களுக்குக் கூட அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படுகிறது. ஈரானில் நியாயமான விசாரணைகள் நடத்தப்படுவதில்லை. சர்வதேச சட்டத்தை மீறி சிறார் குற்றவாளிகளுக்கும் மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. இந்த ஆண்டு மார்ச் மாதம் வரையில் மாத்திரம் 105 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர் - என்றுள்ளது.

மறுபுறம், இந்தக் குற்றச்சாட்டுகளை ஈரான் அரசு மறுத்துள்ளது. இது பாரபட்சமான குற்றச்சாட்டு என மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்தியக் கடைகள் ரஷ்யாவில் திறப்பு

மொஸ்கோ, ஜுன் 24

பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொண்ட ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ரஷ்யாவில் இந்தியக் கடைகளைத் திறப்பது குறித்துப் பேச்சு நடத்தப்படுகிறது எனத் தெரிவித்துள்ளார்.

நேற்றும் இன்றும் நடைபெறும் 14ஆம் பிரிக்ஸ் மாநாட்டில் ஐந்து நாடுகள் கலந்துகொள்கின்றன. இதில் ரஷ்யா, சீனா, இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பிரேஸில் ஆகிய நாடுகளின் அதிபர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் உரையாற்றுகையில்,

பிரிக்ஸ் நாடுகளில் ரஷ்ய நாட்டின் இருப்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்தியக் கடைகளை ரஷ்யாவில் ஆரம்பிப்பது தொடர்பிலும் சீனாவின் வாகனங்கள், வாகன உதிரிப்பாகங்கள் போன்றவற்றின் பங்கை ரஷ்ய சந்தையில் அதிகரிக்கவும் பேச்சு நடத்தப்படுகிறது - என்றார். (ச-இ)

# இந்தியா – சீனா நாடுகளுக்கு கணிசமான கச்சா எண்ணெய்

மொஸ்கோ, ஜுன் 24

இந்தியா மற்றும் சீனாவுக்கு கச்சா எண்ணெய் ஏற்றுமதி கணிசமான அளவுக்கு அதிகரித்துள்ளது என ரஷ்ய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான போருக்குப் பின் ரஷ்யாவிடமிருந்து கச்சா எண்ணெய் உள்ளிட்டவற்றை இறக்குமதி செய்ய மேற்கத்திய நாடுகள் தடைவிதித்தன. இதனால் கடுமையான பொருளாதார நெருக்கடியை ரஷ்யா எதிர்கொண்டுள்ளது.

எனினும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் வழக்கத்தைவிட, கூடுதலாக தள்ளுபடி விலையில் கச்சா எண்ணெயை வாங்கி வருகின்றன.

இந்த பரஸ்பர வர்த்தகம் கடந்த மூன்று மாதங்களில் 38 வீதமாக அதாவது 45 பில்லியன் டொலர் இலக்கை எட்டியுள்ளது எனத் தெரிவித்தார். (ச-இ)



# உலகில் மிகவும் அழகானவர்கள்

வொஷிங்டன், ஜுன் 24

ஹொலிவூட் நடிகர் ரொபர்ட் பாட்டின்சனும், நடிகை ஆம்பர் ஹேர்ட்டும் உலகின் மிக அழகான முக அமைப்பை கொண்டுள்ளனர் என லண்டனை சேர்ந்த முக அறுவை சிகிச்சை மையம் தெரிவித்துள்ளது.

முக அமைப்பு குறித்து இந்த நிறுவனம் கிரேக்க பாரம்பரிய முறையில் நடத்திய ஆய்விலேயே உலகின் மிக அழகான மனிதர்களாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை ஹொலிவூட் நடிகை ஆம்பர் ஹேர்ட் தனது முன்னாள் கணவர் ஜொனி டெப் மீது அவதூறு வழக்கு தொடர்ந்ததன் மூலம் உலகம் முழுவதும் கவனம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

### பொருளாதார நெருக்கடி

# சீனாவிடமிருந்து பாகிஸ்தான் 2.3 பில்லியன் டொலர் கடன்

இஸ்லாமாபாத், ஜுன் 24

பாகிஸ்தான் அரசாங்கம் சீனாவிடமிருந்து 2.3 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் வாங்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாகிஸ்தான் அரசாங்கம் தற்போது கடுமையான நிதிநெருக்கடியைச் சந்தித்துள்ளது.

குறைந்த அந்நிய செலாவணி கையிருப்பு, திரும்பச் செலுத்த வேண்டிய கடன், பாகிஸ்தான் ரூபா மதிப்பு வீழ்ச்சி போன்ற பல சிக்கல்களை அந்த நாடு எதிர்கொண்டு வருகின்றது.

இந்த நிலையில் கடுமையான நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள பாகிஸ்தான் சீனாவிடமிருந்து 2.3 பில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)


# மூழ்கியது ஹொங்கொங் மிதவை உணவகம்

ஹொங்கொங், ஜுன் 24

ஹொங்கொங்கின் அடையாளச் சின்னமாக விளங்கிய ஜம்போ மிதவை உணவகம் கடலுக்குள் மூழ்கியது எனத் தெரிவிக்கப்படுகிறது.


கொரோனா பொதுமுடக்கம் காரணமாக இந்த உணவகம் கடந்த 2020ஆம் ஆண்டு மூடப்பட்டது. எனினும் அந்த உணவகத்தைப் பராமரிப்பதற்கான அதிக செலவால் முதலீட்டாளர்கள் இழப்பை சந்தித்தனர். அதையடுத்து ஹொங்கொங் கடல் பகுதியிலிருந்து பராமரிப்பு செலவு குறைவான மற்றொரு பகுதியை நோக்கி அந்த மிதவை உணவகம் கடந்த செவ்வாய்க்கிழமை இழுத்துச் செல்லப்பட்டது.

இந்தநிலையில், மோசமான வானிலை காரணமாக தென்சீனக் கடலில் பார்சல் தீவுகள் அருகே மிதவை உணவகம் மூழ்கியுள்ளது என உணவக நிறுவனம் தெரிவித்துள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





















# வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நியூஸி. அமைச்சருடன் சந்திப்பு



கொழும்பு, ஜூன் 24

ருவாண்டாவின் கிகாலியில் நடைபெறும் பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ், நியூஸிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் நனையா மஹுதாவை நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தற்போது கொழும்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் இடம்பெற்று வரும் பணியாளர் மட்ட கலந்துரையாடல்கள் மற்றும் உணவு, எரிபொருள் மற்றும் மருந்து விநியோகம் தொடர்பாக இருதரப்பு நன்கொடையாளர்கள் மற்றும் பலதரப்பு நிறுவனங்களிடமிருந்து நாடு பெற்றுக் கொள்ளும் ஆதரவு குறித்து வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் நியூஸிலாந்தின் வெளிவிவகார அமைச்சரிடம் விளக்கினார். அடுத்த சில வாரங்களில் நிதியைக் கட்டுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் சுட்டிக்காட்டினார்.

நியூஸிலாந்து மற்றும் பொதுநலவாய நாடுகளின் ஆதரவு தொடர்பில் ஆராய்வதற்கு நியூஸிலாந்து வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் ஒப்புக் கொண்டார். இலங்கையின் பால் கைத்தொழில் மற்றும் விவசாயம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி தொடர்பில் நியூஸிலாந்தின் உதவியை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் கோரினார்.

கொரோனாத் தாக்கத்தினால் இலங்கையில் பொருளாதார சவால்கள் எவ்வாறு மோசமடைந்துள்ளன என்பதை அமைச்சர் பீரிஸ் விளக்கினார் - என்றுள்ளது. (ம)



இலங்கையின் வனவிலங்கு ஆய்வுத் துறையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய, பிரபல விஞ்ஞானி கலாநிதி ரொஹான் பெத்தியாகொட, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஆலோசகராக அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார். (ம)



மறுசீரமைப்புக்கான மக்கள் இயக்கம், சர்வ கட்சி பேராட்டக்காரர்கள் உட்பட பல சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்றுமுன்தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சு நடத்தினார். (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நல்லூர் பிரதேச சபையின்


# திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் சேதனப்பசளை உற்பத்தி அதிகரிப்பு

**நல்லூர், ஜுன் 24**

**நல்லூர் பிரதேச சபையின் கீழ் இயங்கும், காரைக்கால் திண்மக் கழிவகற்றல் நிலையத்தில் சேதனப் பசளை உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நல்லூர் பிரதேசசபையின் தவிசாளர் மயூரன் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-
நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட திண்மக் கழிவகற்றல் நிலையத்தில் தற்போது நாள் ஒன்றுக்கு 800 கிலோகிராம் சேதனப்பசளை உற்பத்தி செய்யப்படுகின்றது.
ஒரு கிலோகிராம் 15ரூபா வீதம் நாளொன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்குச் சேதனப்பசளை விற்பனை செய்யப்படுகின்றது.
மேலும், விவசாயத் தேவைக்கு சேதனப் பசளை பெறவிரும்புவோர் நல்லூர் பிரதேசசபையில் பெற்றுக்கொள்ள முடியும் -என்றார். (ம-128)



## கொமன்வெல்த் போட்டி: கிளி. இளைஞர் தகுதி!

கிளிநொச்சி, ஜுன் 24
பிரித்தானியா - பர்மிங்ஹாமில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் குத்துச்சண்டைப் போட்டியில் கிளிநொச்சி இளைஞர் ஒருவர் கலந்துகொள்ளவுள்ளார்.
கிளிநொச்சி - தருமபுரம், நாதன் குடியிருப்பை வதிவிடமாகக்கொண்ட விட்டாலிஸ் நிக்லஸ் என்னும் வீரரே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தேசியப் போட்டிகளில் வட மாகாணத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தி பல பதக்கங்களை வடமாகாணத்துக்காகப் பெற்றுக்கொடுத்துள்ளார்.
இவரது திறமை காரணமாக இலங்கை தேசிய குத்துச்சண்டை அணிக்குள் உள்வாங்கப்பட்டு பல தகுதிகாண் போட்டிகளில் வெற்றியீட்டி இந்த கொமன்வெல்த் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
கொமன்வெல்த் குத்துச்சண்டைப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப்பெறும் வீரர்கள் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்புக்களை பெறவுள்ளனர். (ம-113)

## அருளாசியுரையும் வேதபாராயணமும்

யாழ்ப்பாணம், ஜுன். 24
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக, நாட்டு மக்களுக்கு சுபீட்சமானதொரு வாழ்வு வேண்டி, நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு கிளிநொச்சி பளை மாசார் திருவருள்மிகு சித்திவிநாயகர் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ த.தனேஸ்வரசர்மாவின் அருளாசியுரையும், வேத பாராயண நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ய)

## சூரியஒளி மின் விளக்குகள் மாணவர்களுக்கு வழங்கல்!

கொடிகாமம், ஜுன் 24
நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலயத்தில் பொருளாதாரம் நலிவடைந்த 36 மாணவர்களின் கல்வித் தேவைக்காக சூரிய ஒளியில் இயங்கும் மின் விளக்குகள் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் க.கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.
இதில் லண்டனிலுள்ள செரண்டிப் தொண்டு நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் தலா 7 ஆயிரம் ரூபா பெறுமதியான விளக்குகளே மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ச-159)

## ஆறுமுகத்தான்குளம் பாடசாலையின் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு!

முல்லைத்தீவு, ஜுன் 24
முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் அ.த.க.பாடசாலையில் நீண்ட காலமாக நிலவிய குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வாக ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாவனைக்காக நேற்றுமுன்தினம் புதன்கிழமை கையளிக்கப்பட்டது.
கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் இ.கவாஸ்கரினால் கனடா நாட்டில் வசிக்கும் கந்தசாமி பத்மநாதனிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கு அமைய இந்தக் கிணறு அமைக்கப்பட்டது. (ய-13)



## மாணவர்கள் கௌரவிப்பு

கொடிகாமம், ஜுன் 24
2020ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வரணி மத்திய கல்லூரியில் சிறந்த பெறுபேறுகள் பெற்று பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
பாடசாலை அதிபர் ஆ.தங்கவேலு தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் வ.நடராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-159)



'வாழ்க தமிழ்' அமைப்பின் ஏற்பாட்டில், முல்லைத்தீவு முள்ளியவளை மற்றும் வற்றாப்பளை பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டு வாழ்வாதாரத்தை இழந்து பொருளாதாரத்தில் நலிவுற்ற தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு புலம்பெயர் தமிழ் உறவுகளின் நிதியுதவியில் உலருணவுப் பொதிகள் [illegible] வழங்கப்பட்டன. (ய-113)




ஹற்றன் நஷனல் வங்கியின் சாவகச்சேரி கிளையில் வெளிநாடுகளிலிருந்து பணப் பெறுகைகளை மேற்கொண்ட வாடிக்கையாளர்களில் ஐந்து பேர் குலுக்கல் மூலம் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (ய-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டண அறவீட்டை ஆரம்பித்த பின்னர் மக்களுக்குச் சொல்லும் மாநகரசபை

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்ப்பாண மாநகர எல்லைக்குட்பட்ட வீதிகளில் வாகனத் தரிப்பிடக் கட்டண அறவீடு யாழ்.மாநகர சபையால் முன்னெடுக்கப்படவுள்ளன.

வாகனத் தரிப்பிடக் கட்டண அறவீடு மாநகர சபையின் இறைவரிப் பரிசோதகர்களால் அறவிடப்பட்டு வந்தது. குறித்த பணிகளை மாநகர சபை ஊழியர்கள் மூலம் மேற்கொள்வதில் சில வசதியீனங்கள் ஏற்பட்டதால் சபையின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில், மாநகர சபையால் தெரிவு செய்யப்பட்ட தனியார் நிறுவனத்தால் இந்த ஆண்டு மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளன.

அதற்கமைய காங்கேசன்துறை வீதி ரில்கோ சுற்று வட்டத்திலிருந்து மனோகரா திரையரங்கு வரையும், மருத்துவமனை வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து லைடன் காமன்ஸ் சந்தி வரை, கஸ்தூரியார் வீதி மருத்துவமனை வீதியிலிருந்து நாவலர் வீதி வரையும் மின்சார நிலைய வீதி, பொன்னம்பலம் வீதி, வைரவர் கோயில் வீதி, மணிக்கூட்டு வீதி, மகாத்மா காந்தி வீதி, பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி ஆகியவற்றில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களுக்குக் கட்டணங்கள் அறவிடப்படும்.

சைக்கிள் ஒருநாள் முழுவதும் 10 ரூபா, மோட்டார் சைக்கிள் ஒரு நாள் முழுவதும் 20 ரூபா, ஓட்டோ ஒரு நாள் முழுவதும் 50 ரூபா, வான், கார், ஹைஏஸ், பட்டா, வடி போன்ற சிறிய ரக வாகனங்கள் மூன்று மணித்தியாலங்களுக்கு 50 ரூபா, லொறி, கன்ரர் போன்ற கனரக வாகனங்கள் மூன்று மணித்தியாலங்களுக்கு 100 ரூபா என்ற அடிப்படையில் கட்டணங்கள் அறவீடு செய்யப்படவுள்ளன என்று யாழ். மாநகர சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-14)

பூர்வமான நடவடிக்கை எடுக்காமல் தமக்குத் தேவையானவர்களைத் திருப்திப்படுத்தும் வகையிலும், தங்கள் பணியாளர்களை திருப்திப்படுத் தும் வகையிலும் மாத்திரம் செயற்படுவதாகவும் மக்கள் குற்றஞ்சுமத்தினர். (அ-ஓ-5-20-125)

### வீட்டில்...

களுக்கு அறிவித்துள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக கர்ப்பிணித் தாய்மார்களை மருத்துவமனையில் சேர்க்க முடியாத நிலையில் வீட்டிலேயே பிரசவம் மேற்கொள்ளலாம் என அதன் தலைவி தேவிகா கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் சூழ்நிலையில் போக்குவரத்து சிரமங்கள் உள்ளதால் எந்தநேரத்திலும் பிரசவத்தை எதிர்கொள்ளும் தாய்க்கு வசதிகளை செய்து கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் அவர் கூறினார்.

பிரசவத்தில் தலையிடுவதற்கான அனுமதியையும் அதிகாரத்தையும் இலங்கை மருத்துவ சபை தமக்கு வழங்கியுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-ஓ-இ)

### எரிவாயுக்...

நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-ஓ-இ)

### பெற்றோல்...

என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தமது ருவிற்றர் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (அ-ஓ-இ)

### எரிபொருள் விலை...

பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 74 ரூபாவாலும், ஒக்ரேன் 95 பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 78 ரூபாவாலும் டீசல் 56 ரூபாவாலும், சுப்பர் டீசல் விலை 65 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது. அத்துடன் மண்ணெண்ணெய் 200 ரூபாவை விட அதிகரிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ஓ-இ)

### ஆசிரியர்களுக்கு...

யாலங்களுக்கு மட்டும் கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கரடி போக்கு எரிபொருள்நிரப்பு நிலையம், பூநகரி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையம் மற்றும் பளை நகரத்தில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இந்த விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறித்த நிலையங்களுக்கு எரிபொருள் கிடைக்கப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் அவை வழங்கப்படும் - என்றார். (அ-ஓ-214)

### எரிபொருள் நிரப்பு...

செயலகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்ட பின்னர் நேற்று மூன்றாவது நாளாகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள் பதிவாகியுள்ளன.

யாழ்.நகரை அண்டிய பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையமொன்றில் எரிபொருள் பெறுவதற்காக மக்கள் பல மணி நேரம் நீண்ட வரிசைகளில் காத்திருந்த வேளை, அங்கு நல்லூர் பிரதேச செயலகப் பணியாளர்களுக்கு எரிபொருள் வழங்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டதால் அங்கு குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக பணியாளர்களுக்கு வேறொரு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினமும் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையிலும், நேற்றைய தினமும் பிரதேச செயலகப் பணியாளர்களுக்கு எரிபொருள் நிரப்பும் நடவடிக்கையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

அதேவேளை கோப்பாய் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பங்கள் ஏற்பட்டன.

கோப்பாயில், எரிபொருள் நிரப்பு நிலையத்தில் மக்கள் நீண்ட நேரம் வரிசையில் காத்திருந்தவேளை, எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவையினருக்குத்தான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என்று அறிவித்தல் ஒட்டப்பட்டமையால், வரிசையில் காத்திருந்தவர்கள் ஆத்திரமேலீட்டால், அறிவித்தல்களை கிழித்தெறிந்தனர்.

காரைநகரில் பொதுமக்களின் வரிசையைக் குழப்பி பிரதேச செயலகப் பணியாளர் ஒருவர் அதிக தொகைக்கு எரிபொருள் நிரப்பியமையால் நேற்று குழப்பம் ஏற்பட்டது. இதனையடுத்து அங்கு பிரதேச செயலர் பிரசன்னமானார். அவருடன் கருத்து முரண்பட்ட ஒருவர் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார்.

அரச ஊழியர்களை வாரத்தில் இரண்டு அல்லது மூன்று நாள்கள் மட்டும் வேலைக்கு அழைக்கின்ற நிலையில் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கி எரிபொருள் நிரப்புவதன் நோக்கம் என்ன என்றும் மக்கள் கேள்வி எழுப்பினர்.

யாழ். மாவட்டத்தின் எரிபொருள் விநியோகத்தை சீராக்குவதற்கு யாழ். மாவட்டச் செயலகம் ஆக்க


## தேவை

யாழ்நகர் ரவுணில் முன்னணி புத்தகசாலைக்கு காசாளர், விற்பனை உதவியாளர், முகாமையாளர் உடனடியாகத் தேவை. (CS 45294) (3/6)

072 287 5625, 076 711 5374


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
**திரு. த. சுதாகரன்**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி தங்கராசா சுசிலாதேவி**
அவர்கள் 22.06.2022 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உப அலுவலகம், சித்த வைத்தியசாலை, நூலகம்
ஒலுமடு
புதுக்குடியிருப்பு பிரதேச சபை, முல்லைத்தீவு

## ஈர விழிகளுடன் மூன்றாண்டு நினைவலைகள்

### அமரர் சத்தியசீலன் லதர்ஷன்



B.B.A. Hons (Fm. Spl - University of Jaffna, Sri Lanka)
கணக்குப் பதிவாளர் - யாழ். பல்கலைக்கழகம், இலங்கை )

மனம் மகிழ 10.12.1989 — மனம் நெகிழ 24.06.2019

மகனே வளர்ந்து வந்த வழி மாறி நீ எங்கே சென்றாய்
காலன் தான் உன்னைக் கவர்ந்து சென்றானோ
பெற்றவர்கள் தவிக்கிறார்கள். சகோதர, சகோதரிகள்
உற்றார், உவினர்கள், நண்பர்கள் கதறுகின்றார்கள்
உன் இனிய ஓசை கேட்கவில்லையென
ஆண்டுகள் மூன்று தான் கடந்ததுவோ - லதர்சா!
நாம் ஆறாத்துயரில் தவிக்கின்றோம் - எம் துயர் துடைக்க
புத்துயிர் பெற்றுவந்துவிடு மகனே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உன் நினைவலைகள்
எங்களை விட்டுப் பிரியாது மகனே மீண்டும் உன்
அழகு முகம் பார்க்க வாடுகின்றோம்

உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கேணியடி வீதி,
கொக்குவில்.

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா மற்றும் குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு லட்சம் ரூபா தண்டப் பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்ட சோதனைகளின்போது அதிகூடிய விலைக்கு அரிசியை விற்பனை செய்த 106 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### இராணுவம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் அதிகாரிக்கும் இராணுவ அதிகாரிக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றும்போது பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இராணுவ லெப்டினன்ட் கேணல் தர அதிகாரி ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வாக்குவாதத்தைத் தொடர்ந்து லெப்டினன்ட் கேணல், பொலிஸ் அதிகாரியைத் தாக்கியமை பெற்றோல் நிலையத்தில் உள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளது. சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வரக்காபொல மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். சம்பவம் தொடர்பில் லெப்டினன்ட் கேணல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ-ஒ-இ)

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 11 . 01 . 1939



மறைவு 23 . 06 . 2022

### சோமசுந்தரம் நித்தியரெத்தினம்

மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நித்தியரெத்தினம் நேற்று (23.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் மனைவியும் காலஞ்சென்றவர்களான பழனித்துரை விசாலாட்சியின் மகளும் மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான கந்தையா இளையாச்சியின் மருமகளும் காலஞ்சென்ற மங்கையற்கரசி மற்றும் உருத்திராதேவி, பாலச்சந்திரன், கமலாதேவி காலஞ்சென்ற சத்தியபாலன் (செல்வம்) ஆகியோரின் சகோதரியும் ரமணலதா, சாருலதா, சினேகலதா, ரதீஸ், குகதர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரூபன் காலஞ்சென்ற கிருஸ்ணசிங்கம் மற்றும் வேல்ராசா, தேவராசன், சிவப்பிரியா, தேனுகா ஆகியோரின் மாமியாரும் கவாஸ்கர்- கயந்தினி, சுலக்ஷன்-பிர்மிகா, தினுசன், பிரசாந், மதுஷா-அஜந்தன், விதுஷா-தனுசன், விதுஷன், இந்துசன், சாருஜன், கஜீவன், அர்ச்சனா, லேனுசா, குகசாத், கஸ்தூரி, பிவுஷன், ரபிஷா, அபிநாத், சாத்விகா ஆகியோரின் பேர்த்தியும் யகிஷா, யஸ்வின், யஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 923 2560**
**077 273 7836**

தகவல்:
**குடும்பத்தினர்**

---

## மரண அறிவித்தல்



மண்ணில் 23.08.1934 விண்ணில் 21.06.2022

திருமதி
### சிவபாக்கியம் நாகலிங்கம்
**(ஆச்சி அக்கா)**

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும், பிற்காலத்தில் கனடாவில் வாழ்ந்து வந்தவருமாகிய திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம் அவர்கள் 2022ம் ஆண்டு, ஆனி மாதம், 21ம் நாள், செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. சிவசம்பு, திருமதி. ஞானபூரணம் (நேசம்மா) தம்பதிகளின் அன்பு மகளும், காலம்சென்றவர்களான திரு. சுப்பையா, திருமதி உத்தமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலம் சென்ற திரு. சுப்பையா நாகலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சத்தியபாமா (பாமா - கனடா), றஞ்சிற்குமார் (றஞ்சிற் - லண்டன்), பாலகுமார் (பாலா - கனடா), சுதாமதி (சுதா - சுவிஸ்), விஜயகுமார் (விஜி - லண்டன) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தளையசிங்கம், காலஞ்சென்ற ரவீந்திரா, சாந்தினி, சுப்பிரமணியம், மாலினிதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவனேசன், சிவசுந்தரம், சிவஞானம்மாள், சிவனையா, சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலயோகினி, ரஞ்சிதலோசனி (றஞ்சி), காலஞ்சென்ற திரு.பொன்னம்பலம், சறோஜினிதேவி (சறோ), காலம் சென்ற திரு.தம்பிராஜா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1, Canada வில் அமைந்துள்ள Chapel Ridge Funeral Home & Cremation Center இல் 25 ஆனி 2022 சனிக்கிழமை மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணிவரையிலும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணி முதல் 8.30 மணி வரையிலும் பார்வைக்கு வைக்கப்பட்டு, 8.30 மணி முதல் 10.00 மணி வரை ஈமைக்கிரியைகள் நடைபெற்று காலை 10:30 மணிக்கு 12492 Woodbine Avalue, Gormley, Ontario (Stouffville/Woodbine) இல் அமைந்துள்ள Highland Hillscrematorium இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்திலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு**

| | | |
|---|---|---|
| சத்தியபாமா | (கனடா) | (416) 496 - 9071 |
| றஞ்சிற்குமார் | (லண்டன்) | 0044 794 106 9796 |
| பாலகுமார் | (கனடா) | (416) 455 - 2196 |
| சுதாமதி | (சுவிஸ்) | 00 41 794 286 724 |
| விஜயகுமார் | (லண்டன்) | 00 44 796 076 1409 |


தகவல்:
**குடும்பத்தினர்**

---

# மரண அறிவித்தல்

# கந்தையா துரைராசா

**(உரிமையாளர் - பத்திரகாளி கோவிலடி வெற்றிலைக்கடை)**



தோற்றம் 13.02.1928 மறைவு 22.06.2022

யாழ். நாவலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா துரைராசா கடந்த (22.06.2022) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வசாவிளானை சேர்ந்த காசிநாத கந்தையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான முருகேசு தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்னக்கிளியின் அன்புக் கணவரும், மனோரஞ்சினி, காலஞ்சென்ற ரஞ்சிதம் மற்றும் கௌரிநாயகி (ஓய்வுபெற்ற மருந்தாளர், சுகாதார பணிமனை, யாழ்ப்பாணம்), சாரதாமணி, தவநேசன் (ஜேர்மனி), ஜெகதீஸ்வரி (ஆசிரியை - இளையதம்பி மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேந்திரன், காலஞ்சென்ற கிரிஷ்ண சுந்தரம் மற்றும் ஸ்ரீஆனந்தன், சுபமாலா (ஜேர்மனி), ஸ்ரீதரன், தீபா, சகுந்தலாதேவி (ஜேர்மனி), சற்குணாதேவி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஹரிஸ், பிரணவன், பவனிகன், கௌதம், மதுசன், பைரவி (ஜேர்மனி), கோபிகா, வேணுகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2022) வெள்ளிக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாவலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(cs.19804) (2.6)

தகவல்:
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
06 . 09 . 1950



மறைவு
23 . 06 . 2022

## திருமதி மேரி லூசியா பிறிற்றோ (ராணி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.ஆஸ்பத்திரி வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி லூசியா பிறிற்றோ (ராணி) 23.06.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மற்றும் லூர்த்தம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் மற்றும் அன்னம்மா ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்றவரான ஆசீர்வாதம் பிறிற்றோவின் மனைவியும், டொன் கிஷியாந்தன் (முகாமையாளர் - BOC உரும்பிராய்), தமிழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), ஜொணி அஜித் (பிராந்திய முகாமையாளர் PARCIC), சுமங்கலி (நிறைவேற்று உத்தியோகத்தர் - NSB செங்கலடி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெலிஸ்ரா (வைத்தியர் - யாழ்.போதனா வைத்தியசாலை), நிஷந்த கமல் சிறி (ஹிமாலயா மேற்பார்வையாளர்), நொய்லின், சுஜீவன் (Markers உரிமையாளர்) ஆகியோரின் மாமியாரும் மேரி மடோலின், ஹரிஷ் பெலிசியன், சர்வஜித் ஆகியோரின் பேர்த்தியும், மரியதாஸ் காலஞ்சென்றவரான அல்வின் மற்றும் யூஜின் ஆகியோரின் சகோதரியும் றீற்றா, தங்கராசா, சாரதா, மேனகா, சுசிலா, சகுந்தலா, இருதயமேரி, செல்வதி மற்றும் வலன்ரைன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (24.06.2022) வெள்ளிக்கிழமை புனித யுவானியார் ஆலயத்தில் முற்பகல் 10.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(er. 46231) (2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
25 . 08 . 1934



இறப்பு
23 . 06 . 2022

## சின்னையா பஞ்சலிங்கம்

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பஞ்சலிங்கம் நேற்று (23.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா சரஸ்வதி தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கனகசபை இரத்தினம்மா தம்பதியினரின் மருமகனும், தவமணிதேவியின் (சாரதா) அன்புக்கணவரும் ஸ்ரீகுமரகுருபரன் (பாஸ்கரன்-கனடா), காலஞ்சென்ற வஞ்சிதன், ராஜி (கனடா), பக்தரன் (கனடா), சசிகலா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வஞ்சி, குகன், ஜெயச்சந்திரன், சகிலா மற்றும் சுகராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் திவ்யா, விஷ்ணுதன், பிரவீன், சியாமினா, லக்ஷன், நிஷா, அபினா, ஜெனுசா, ஜெசிந் ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற இராசதுரை, சகுந்தலாதேவி, புலேந்திரராஜா, நவரட்ணராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கலைஞானதேவி, காலஞ்சென்ற சோமசுந்தரம், கனகறஞ்சினி, சுபத்திரா, காலஞ்சென்ற வைரவநாதன், லோகசௌந்தரி, யோகராணி, கமலாதேவி, சபாரத்தினம், காலஞ்சென்ற இராசேந்திரம் ஆகியோரின் மைத்துனரும் நிசாந்தன், அனித்தா, நிசாந்திகா, ஜான்சன், காலஞ்சென்ற திவாகர், பிரியந்தா, ஜெய்கரன், சாருஜன், இந்துஜா, நதியா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 26.06.2022 ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கோண்டாவில் கட்டை ஆலடி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஞானவைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 684 5510

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26 . 04 . 1937



மறைவு
20 . 06 . 2017

## திருமதி கந்தையா நாகம்மா

**படித்த மகளிர் திட்டம் மிருசுவில்**

**திதி: அபரபக்க ஏகாதசி**

எங்களின் மூத்த சகோதரியாக எங்களிற்கு அக்காவின் வடிவத்தில் தாயாக எம்முடன் வாழ்ந்து வந்தீர்கள் உடன் பிறப்பில் சகோதரியாகவும் உள்ளத்தால் தாயாகவும் வாழ்ந்தீர்கள்.

எங்களின் தாய் தந்தையர் இறந்தபின் எங்களிற்கு நல்ல தந்தையாகவும் அன்பு காட்டுவதில் தாயினும் இனியவளாகவும் இருந்துள்ளீர்கள். நல்ல பாது காவலராகவும் சிறந்த வழிகாட்டியாகவும் வாழ்ந்து எம்மையெல்லாம் வழி நடத்தினீர்கள். உடன்பிறப்புக்கள் எல்லோருக்கும் முடிந்தளவிற்கு உதவி செய்துள்ளீர்கள். உறவுகளிற்கும் உடலாலும் உள்ளத்தாலும் உதவியாக வாழ்ந்துள்ளீர்கள் .

தனக்கென ஒரு பிள்ளை இல்லையே என்று கவலைகொள்ளாது உடன்பிறந்தவர்களின் பிள்ளைகளைத் தனது பிள்ளைகளாகக் கருதி கல்வி கற்பதற்கு வழிகாட்டியாக விளங்கியதுடன் அவர்களை ஊக்குவித்தும் வந்துள்ளீர்கள். ஆலோசனை வழங்குவதிலும் அறிவுரை வழங்குவதிலும் நல்ல மதியுரைஞராகத் திகழ்ந்தீர்கள் உங்கள் வழிகாட்டலால் தான் அவர்கள் இன்று உயர்ந்து விளங்குகின்றார்கள் உங்கள் உடைமைகளையும் மனமுவந்து அவர்களுக்கு வழங்கினீர்கள்.

இளமையில் கணவனை இழந்தும் எந்த ஒரு இழிச்சொல்லிற்கும் இடம் வைக்காது புனிதமாக வாழ்ந்த புனிதவதி நீங்கள் அக்கா. படித்த மகளிர் திட்டத்தின் செயலாளராகவும், பல மகளிர் அமைப்புக்களின் தலைவராகவும் கடமை புரிந்துள்ளீர்கள். மாதர் சங்கம் ஆரம்பித்த காலத்தில் மாதர் சங்கத்தலைவியாக மங்கையர்களால் தெரிவு செய்யப்பட்ட மாண்புடையவர் நீங்கள்.

படித்த மகளிர் திட்டத்தில் நீங்கள் பெருமைக்குரிய ஒருவராகத் திகழ்ந்தீர்கள். உங்களின் சிபார்சினால் எத்தனையோ படித்த பெண்களிற்கு காணிகளைப் பெற்றுக்கொடுத்துள்ளீர்கள். இன்று வானளவில் உயர்ந்து விளங்கும் மிருசுவில் ஞான துர்க்கையம்மன் ஆலயம் அமைந்து உள்ள காணி உங்கள் முயற்சியால் உங்கள் தங்கைக்கு நீங்கள் பெற்றுக் கொடுத்தது என்பதை எவரும் மறுக்க இயலாது. நாகம்மா அக்கா என்றால் யாவரும் அறிவர்.

76 வயது வரை எம்மிடையே ஆரோக்கியத்துடன் வாழ்ந்து வந்தீர்கள். இறுதி நான்கு ஆண்டுகளில் கால் நடக்க முடியாமல் படுக்கையானீர்கள். தற்செயலாக வீழ்ந்தமை ஒரு காரணமாகி உங்களைச் செயல் இழக்கச் செய்தது. 80 வயதில் எம்மை எல்லாம் விட்டுப் பிரிந்தீர்கள்.

என்ரை அக்காவிற்கு சிறிது காலமாவது பணிவிடை செய்து பக்கத்தில் இருக்கலாம் என்று நினைத்து ஓடோடிவந்தேன். நாம் நினைப்பதெல்லாம் நடப்பதில்லையே. அதே நேரத்தில் எனது கணவருக்கு நோய் ஏற்பட்டதால் நான் அங்கு போகவேண்டி ஏற்பட்டது. ஒருமாதமாவது உங்கள் விருப்பப்படி உங்களை என்னுடன் வைத்திருந்து உங்களிற்கு பணிவிடை செய்தேன் என எண்ணித் திருப்தியடைகின்றேன். நீங்கள் பிரியும் நேரத்தில் நான் பக்கத்தில் நிற்கவும் இல்லை. பாலும் வார்க்கவுமில்லை என்ற வருத்தம் இன்று வரைக்கும் என்னை வருத்துகிறது.

என்ன செய்வது மரணம் என்பது இறைவனின் தீர்ப்பு : இதை யாராலும் தடுக்க முடியாது. பிறந்தவர் யாவரும்மரணிப்பது இயற்கைதான என ஆறுதல் அடைகின்றோம்.

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து ஐந்து ஆண்டுகள் நிறைவடைகின்றன. நல்லதோர் பிறவி யெடுத்து இன்புற்று வாழ்வீர்கள் எனக்கருதி ஐந்தாம் ஆண்டில் அஞ்சலித்து நிற்கின்றோம்.

**உங்களின் பிரிவால் துயருறும்**

**அன்புத் தங்கை : திருமதி பத்மாதேவி தியாகராசா**

**சகோதர சகோதரிகள்,**

**உடன் பிறப்புக்களின் குடும்பங்கள்,**

**பெறாமக்கள், பேரப்பிள்ளைகள்,**

**உறவினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருந்தூர் மலை விவகாரம்;

# விளக்கமளிக்க கால அவகாசம் தேவையாம்

## மன்றில் பொலிஸார் விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

குருந்தூர்மலையில் கடந்த 12ஆம் திகதி, நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்பட்ட விகாரையில் பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எதிர்ப்புக்களால் பின்னர் அந்த நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் ஏற்கனவே முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை, 16ஆம் திகதி நகர்த்தல்பத்திரம் அணைத்து, நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டமை தொடர்பில் முல்லைத்தீவு நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. நீதிவான் ரி.சரவணராஜா, குருந்தூர்மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில், பொலிஸாரிடம் விளக்கம் கோரி வழக்கை நேற்று வரையில் ஒத்திவைத்திருந்தார்.

நேற்றைய தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணைகள் தொடர்பில் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகளில் ஒருவரான எஸ்.தனஞ்சயன் கருத்துத் தெரிவிக்கையில்;

பொலிஸ்தரப்பில் விளக்கமளிப்பதற்காக உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் உட்பட்டநபர்கள் மன்றிலே முன்னிலையாகியிருந்தனர்.

நீதிமன்றக் கட்டளையை மீறியமைக்கவே, எம்மால் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கு, விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளையிலே சைவமக்கள் குருந்தூர் மலைக்குச் சென்று வழிபடமுடியும் எனவும், அங்கு வேறு எந்தவிதமான கட்டடங்களும் அமைக்கப்படமுடியாது எனவும் நீதிமன்று கட்டளையிட்டிருந்தது.

அவ்வாறு நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளையை மீறி, குருந்தூர் மலையில் புதிதாக விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

அந்த விகாரை சட்ட விரோதமாகவே அமைக்கப்பட்டுள்ளது. எனவே அந்த விகாரையைக் கட்டிய நபர்களைக் கைது செய்யவேண்டும் என்ற அடிப்படையில் நாம் நீதிமன்றில் எமது சமர்ப்பணத்தைச் செய்திருந்தோம்.

எனினும் விளக்கமளிப்பதற்காக மன்றிலே முன்னிலையாகியிருந்த பொலிஸார், குருந்தூர் மலையில் விகாரையைக் கட்டிய நபர்கள், விகாரையைக் கட்டுவதற்கு அனுமதி பெறுவதற்கு எத்தனித்த ஆவணங்களை மாத்திரம் மன்றிலே சமர்ப்பித்திருந்தனர்.

மேலும் இது தொடர்பிலே முழுமையான விளக்கத்தை நீதிமன்றுக்கு வழங்கமுடியாத சூழ்நிலை இருப்பதாகத் தெரிவித்துடன், மேலதிகமாக இதுதொடர்பில் அறிக்கையை மன்றுக்கு வழங்க தவணை வேண்டுமெனவும் கேட்டிருந்தனர்.

பொலிஸாரால் கூறப்பட்ட விடயங்களை, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயநிர்வாகம் சார்பில் மன்றில் முன்னிலையான நாம் எதிர்த்தோம்.

பொலிஸார் மீளப் பதில் வழங்குவதற்காக, இந்த வழக்கானது எதிர்வரும் 30ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது - என்றார்.

(அ-ஒ-246)

# காணாமற்போன மீனவர்கள் நேற்றுக் கரை திரும்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 24

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சக்கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் கடற்றொழிலுக்குச் சென்ற 4 மீனவர்கள் காணாமற்போயிருந்த நிலையில் நேற்றுக்காலை அவர்கள் கரைதிரும்பியுள்ளனர். கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக அவர்கள் தத்தளித்துள்ளனர். இதனை அவதானித்த இந்திய ட்ரோலர் படகு ஒன்று, இலங்கை மீனவர்களின் படகை கட்டியிழுத்து கரைக்குகொண்டுவர முயற்சித்துள்ளது. அதற்கிடையில் இலங்கை மீனவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்ற நிலையில் அவர்கள் படகை மீட்டு, சக்கோட்டையில் கரை சேர்த்தனர்.

(அ-ஒ-125)

# 15 வயதுக்கு மேற்பட்டோருக்கு இலத்திரனியல் அடையாள அட்டை

கொழும்பு, ஜூன் 24

15 வயதுக்கு மேற்பட்ட அனைவரையும் பதிவு செய்து இலத்திரனியல் (டிஜிற்றல்) அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஆள்பதிவு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார்.

புதிய அடையாள அட்டையில் கைரேகை, குருதி வகை உள்ளிட்ட மேலதிகமாக உயிரியல் விஞ்ஞானத் தரவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சைபர் தளத்தில் ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தும் விடயங்களும் இந்த நடைமுறையில் முன்னெடுக்கப்படவுள்ளது

இந்திய அரசின் கடன் உதவியுடன் தயாரிக்கப்பட்டு இந்த அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

(அ-ஒ-இ)

23) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஊடகப் பயிலுநர் நண்பருடன் எரிபொருள் நிரப்ப அந்த இளைஞர் சென்றுள்ளார். அப்போது இடையில் புகுந்து வந்தவர்கள் எரிபொருள் நிரப்ப முற்பட்டபோது ஊடக நண்பர் காணொலிப் பதிவு செய்துள்ளார். காணொலிப் பதிவை தடுக்க எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர், ஊடக பயிலுநரின் கையை முறுக்கியுள்ளார்.

அதன்போது நியாயம் கேட்க முற்பட்ட இளைஞனை எரிபொருள் நிலையத்திலுள்ள மூவர் தலைக்கவசத்தால் தாக்கியுள்ளனர். அதனால் இளைஞனுக்கு வாய், மூக்கு வழியாக குருதி ஓடியுள்ளது.

அங்கிருந்து வீடு சென்ற இளைஞர் மறுநாள் மதியம் நெஞ்சுவலி மற்றும் உடல் சோர்வடைய யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

எனினும் இரண்டு நாள்களின் பின் அவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்' என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் இறப்பு விசாரணையை மேற்கொண்டதுடன் இளைஞனின் சடலத்தின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் இடம்பெற்றது.

இளைஞர் மாரடைப்பாலே உயிரிழந்தார் என்று சட்டமருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இருப்பினும் மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

(அ-ஒ-26-125)

தும் சிறப்பாகச் சேவையாற்றி வருவது அனைவருக்கும் தெரிந்ததே. ஆனால் அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது எல்லோரையும் போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும், அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் மருத்துவ சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது. இதை அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். ஆனாலும் சில குறுகிய நோக்குள்ள, மனிதநேயம் அற்ற சிலர் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்களை உருவாக்கி மருத்துவமனை ஊழியர்கள் எரிபொருள் பெறுவதை தடுப்பதன் மூலம் இன்பம் காண்கின்றனர்.

இருப்பினும் சுகாதார அமைச்சு மருத்துவமனை பணியாளர்களுக்கு எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மருத்துவமனை மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கும் முடிவை எடுத்துள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு மாவட்டச் செயலரும், பிரதேச செயலர்களும், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு துறையினரும் மனப்பூர்வமாக முன்வரவேண்டும்.

அவ்வாறு இல்லையெனில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும். எனவே பொது மக்களையும் உரிய தரப்பினரையும் உணர்ந்து செயற்பட்டு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம் - என்றுள்ளது.

(அ-ஒ-இ)

### அதிகபட்ச...

சிறிலங்காவுக்கு தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பில் நாட்டுக்கு வருகை தந்துள்ள இந்திய விசேட தூதுக்குழுவுக்கும், ஜனாதிபதி கோத்தாபயவுக்கும் இடையில் கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இந்திய வெளிவிவகாரச் செயலர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில்,

இந்தியக் கடன் உதவியின் கீழ் எரிபொருள், மருந்து, உரம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களை சிறிலங்கா ஏற்கனவே பெற்றுள்ளது. அது தொடர்பில் மீளாய்வு செய்த தூதுக்குழு, சிறிலங்காவுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசாங்கமும் அரச அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

கடினமான காலங்களில் சிறிலங்காவுக்கு உதவுவதில் இந்திய அரசாங்கம் கணிசமான பங்கை வகிக்கிறது. அதற்காக சிறிலங்கா மக்களும் அரசாங்கமும் பாராட்டுக்களையும் நன்றியையும் இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி, தூதுக் குழுவினிடம் குறிப்பிட்டார். சிறிலங்காவின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்தவும், இயல்பு நிலைக்கு மாற்றவும் இந்திய உதவித் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடினர்.

இக்கட்டான காலகட்டத்துக்குப் பிறகு நாடு மிக விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தூதுக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்திய பொருளாதார உறவுகள் தொடர்பான செயலர் அஜய் சேத், தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி. அனந்த நாகேஸ்வரன், சிறிலங்காவுக்கான இந்தியத்தூதுவர் கோபால் பாக்லே, துணைத்தூதுவர் வினோத் கே ஜேக்கப், இந்திய கடல்சார் பிராந்திய ஒன்றிணைந்த செயலர் கார்த்திக் பாண்டே மற்றும் ஜனாதிபதியின் செயலர் காமினி செனரத் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர் என்று, ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

(அ-ஒ-இ)

### எரிபொருள் நிரப்பு...

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணியளவில் இளைஞர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதால், அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். [illegible] உடுவில் [illegible] சேர்ந்த செல்வரத்தினம் பிரசாந் (வயது-

### யாழ். போதனா...

மருத்துவமனையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வட மாகாணத்திலுள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா மருத்துவமனையாக இருக்கும் எமது மருத்துவமனை ஆளணிப் பற்றாக்குறை' இருந்தபோ

### வத்தளைவாசி...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் கொழும்பு வத்தளைப் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது-40) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளை மல்லாவி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-ஒ-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடமைத்தன சிந்தனையாளர்களாலேயே நிறைவேற்று அதிகாரத்தை எதிர்க்கிறோம்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 24**

**"நாடாளுமன்ற முறைமையிலேயே தந்தை செல்வாவுடனான ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டன. அதேபோன்று நிறைவேற்று அதிகார முறைமையினாலேயே ஸ்ரீ எழுத்து நீக்கப்பட்டது. எனவே, நிறைவேற்று அதிகாரம் என்பது இங்கு பிரச்சினை இல்லை. கோத்தாபய போன்ற மடமைத்தனமாகச் சிந்திக்கக் கூடியவர்களின் கைகளிலே இவ்வாறான அதிகாரம் இருப்பதனாலேயே நாங்கள் இன்று அதனை இல்லாமல் செய்ய வேண்டும் என்று விரும்புகின்றோம்" - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தற்போது அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் கதைகள் இருக்கின்றன. இந்த 21 ஆவது அரசமைப்புத் திருத்தத்தினால் எமது மக்களுக்கு வடக்கு, கிழக்கு பிரதேசங்களுக்கு என்ன நன்மை இருக்கின்றது என்பதை நாங்கள் சிந்திக்கவேண்டும்.
இதற்கு எட்டுத் திருத்தங்களுக்கு முன்பு வந்த 13 ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாகக்கொண்டு வரப்பட்ட சட்டமூலங்கள் கூட இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. 13 ஆவது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் இன்றும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. அதனூடாக இந்த அரசு அரசமைப்பை மீறுகின்றதாகவே கருதப்படுகின்றது.
21 ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாங்கள் ஆதரிக்கவேண்டும் என்ற நிலைப்பாடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலுள்ள ஒரு சாராருக்கு இருக்கின்றது. இந்த 21ஆவது திருத்தச் சட்ட வரைவிலும் அவர்கள் மிக முக்கிய பங்காற்றியிருப்பதாகக் கூடக் கூறியிருக்கின்றார்கள்.
ஆனால், இந்த 21ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைத்து நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களைக் கொடுத்து நாடாளுமன்ற ஜனநாயக முறையைக் கொண்டு வரவேண்டும் என்று கூறப்படுகின்றது.
இவ்வாறான நாடாளுமன்ற ஜனநாயக முறை இருக்கும்போதுதான் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. கைச்சாத்திடப்பட்ட அந்த ஒப்பந்தங்கள் இந்த நாடாளுமன்ற ஜனநாயக முறைமையிலே கிழித்தெறியப்பட்ட வரலாறுகளே இருக்கின்றன. நிறைவேற்ற அதிகார ஜனாதிபதி முறை 1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவினாலேயே முதல் முறையாகக் கொண்டு வரப்பட்டது. இதற்கு முன்னர் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இலங்கையில் கொழுந்து விட்டெரிந்த ஸ்ரீ பிரச்சினை இரவோடு இரவாக நாடாளுமன்றத்துக்குச் சட்டமூலம் கொண்டு வரப்படாமல் நிறைவேற்று அதிகார முறையால் இல்லாமலாக்கப்பட்ட வரலாறும் உண்டு.
21 ஆவது திருத்தச் சட்டத்துக்குத் தமிழ்த் தேசியப் பரப்பிலே இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் ஆதரவு கொடுக்க வேண்டும் என்றால் 13ஆவது திருத்தச் சட்டத்துக்குள் இருக்கும் அதிகரங்களை முழுமையாகப் பரவலாக்க வேண்டும் என்ற திருத்தம் 21ஆவது திருத்தச் சட்டத்துக்குள்ளே உள்வாங்கப்பட வேண்டும். அதற்கும் மேலாக நிதி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்குப் பகிரப்பட வேண்டும் என்கின்ற சரத்துக்கள் கூட 21ஆவது திருத்தச்

# பொருளாதார நெருக்கடிகளால் மட்டக்களப்பின் நிலை மோசம்

## ஜனா எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 24
பொருளாதார நெருக்கடியால் ஒட்டுமொத்த நாட்டிலும் தட்டுப்பாடு நிலவினாலும் விவசாயத்தை, மீன்பிடியை நம்பியிருக்கும் மட்டக்களப்பு மாவட்டம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா).
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டின் பொருளாதார நிலை மிக மோசமாக இருக்கின்றது. மட்டக்களப்பு மாவட்ட நிலைமை சம்பந்தமாகவும் பேசவேண்டியுள்ளது. உண்மையில் உணவுப் பொருள்களுக்கு மாத்திரமல்ல உணவை உற்பத்தி செய்வதற்கான எரிபொருளுக்கும் மிகவும் தட்டுப்பாடான நிலை இருக்கின்றது.
தற்போது அறுவடை நடைபெறவிருக்கின்றது. மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல முடியாத நிலை இருக்கின்றது. எரிவாயுப் பிரச்சினையால் மண்ணெண்ணெய் தட்டுப்பாடான நிலையில் ஒவ்வொருவருடைய வீட்டிலும் அடுப்பு எரிவதற்குக்கூட சிரமமாக இருக்கின்றது. இந்தநிலையில் நீண்ட வரிசைகளைத்தான் ஒவ்வொரு எரிபொருள் நிலையங்களிலும் பார்க்கக்கூடியதாக இருக்கின்றது.
நாட்டின் அரசாங்கத்தில் ஒரு மாற்றம் ஏற்படாதவரை இந்த நாட்டின் பொருளாதாரம் தற்போதிருக்கின்ற நிலைமையை விட மோசமாகச் செல்லும் - என்றார். (ம)

# சுங்கம் தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிப்பு



கொழும்பு, ஜூன் 24
இலங்கை சுங்கம் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை நேற்று முன்தினம் ஆணைக்குழுவின் தலைவர் உயர் நீதிமன்ற நீதிபதி ஷிரான் குணரத்னவால் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கையளிக்கப்பட்டது.
சுங்கம் தொடர்பாக முன்வைக்கப்படும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றுள்ளதாகக் கருதப்படும் முறைகேடுகள் தொடர்பாக விசாரித்து அறிக்கை அளிப்பதற்காக கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஆறு பேர் கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி பிரியந்த பெர்னாண்டோ, மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த, இலங்கை மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் கே.எம்.எம்.ஸ்ரீவர்தன, சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி சனத் ஜயநெத்தி மற்றும் இலங்கை சுங்கத்தின் முன்னாள் மேலதிக பணிப்பாளர் நாயகம் பி.ஏ.டயஸ் ஆகியோரைக் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதி ஷிரான் குணரத்னவின் தலைமையிலான ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.
சுங்க அதிகாரிகள், சுங்க தொழிற்சங்கங்கள், அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகள், சேவை பெறுநர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடம் ஆணைக்குழு சுமார் ஒரு வருட காலமாக தகவல்களைப் பெற்றுக் கொண்டது. இறுதியில் 117 பரிந்துரைகள் மற்றும் 530 பக்கங் களைக் கொண்ட அறிக்கையைத் தயாரித்துள்ளது.
பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் இலங்கை சுங்கம் நிறுவன ரீதியான, நிர்வாக மற்றும் செயற்பாடுகளை எவ்வாறு திறம்பட மற்றும் வினைத்திறனுடன் மேற்கொள்ள முடியும் என்பதற்கான பரிந்துரைகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையை கூடிய விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். (எ-இ)

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில்
08 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A-9 வீதியிலிருந்து இரண்டாவது காணி இரு வழிப்பாதையுடன்
- கைதடிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம் : காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு:
076 658 3621, 077 259 0391

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழியில் A-9 வீதி முகப்புடன்
27 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- A-9 வீதியை முகப்பாகக் கொண்டது.
- 4 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள். திருமண மண்டபங்கள். களஞ்சியசாலைகள். வாகனக்காட்சியறைகள் அமைப்பதற்கு உகந்த இடம்
- நாவற்குழிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரம்
பார்வையிடும் நேரம்:காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு
074 2690 854
076 2611 282

காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
- A-9 வீதியிலிருந்து 250 மீற்றர் தூரத்தில் 18 அடிப்பாதையுடன்
- நல்ல இயற்கைச் சூழல். நல்ல தண்ணீர்
- 1 பரப்பின் விலை நான்கு இலட்சம் ரூபா (400000)
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
பார்வையிடும் நேரம்
காலை 8.00 - மாலை 6.00 மணி வரை
தொடர்புகளுக்கு
074 2913 726
074 2913 727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.